இது தொடர்பாக மத்திய அரசை அணுகிய போது பி.எம்., ஸ்ரீ திட்டம் மற்றும் புதிய கல்வி கொள்கையை தமிழகத்தில் அமல்படுத்தினால் மட்டுமே இந்த நிதியை விடுவிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டது. ஆனால், மும்மொழி கொள்கை போன்ற காரணங்களுக்காக புதிய கல்வி கொள்கையை தமிழக அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ் நிதியை பெறுவதற்கான தமிழகத்தின் உரிமையை மத்திய அரசு தடுத்து நிறுத்துவது என்பது கூட்டாட்சி தத்துவத்துக்கு எதிரானது மட்டுமின்றி அவமதிப்பதாகும். மேலும், அரசியலமைப்பு சட்டத்துக்கு விரோதமாக ஒரு மாநிலத்தில் குறிப்பிட்ட கல்வி கொள்கையை அமல்படுத்தவும், ஏற்கனவே பின்பற்றப்பட்டு வரும் கல்வி முறையில் இருந்து விலக வேண்டும் எனவும் மத்திய அரசு தமிழக அரசை கட்டாயப்படுத்தி வருகிறது.

ஒரு திட்டத்தை கட்டாயம் ஏற்றுக்கொள்ள வேண்டும், இல்லாவிட்டால் நிதியை நிறுத்துவோம் என அழுத்தம் கொடுப்பது சட்டத்துக்கு புறம்பானது. தமிழகம் ஏற்கனவே கல்வியில் முன்னேறிய மாநிலமாக நாட்டுக்கே முன்னோடியாக திகழ்கிறது. இந்த நிலையில் நிதி உதவி என்ற போர்வையில் மத்திய அரசு தனது கொள்கையை செயல்படுத்த வேண்டும் என தமிழகத்தை கட்டாயப்படுத்த முடியாது. மத்திய அரசின் புதிய தேசிய கல்வி கொள்கையை தமிழகத்தில் அமல்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

இந்த சூழலில் சமக்ர சிக்ஷா திட்டத்தின்கீழ் தமிழகத்துக்கு வழங்க வேண்டிய ரூ.2,152 கோடியை மத்திய அரசு நிறுத்தி வைத்துள்ளதால் தமிழகத்தில் 43.94 லட்சம் மாணவர்கள், 2.21 லட்சம் ஆசிரியர்கள், 32,701 இதர பணியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, ரூ.2,152 கோடியை உச்ச நீதிமன்றம் நிர்ணயம் செய்யும் குறிப்பிட்ட கால வரையறைக்குள் 6 சதவீத வட்டியுடன் சேர்த்து ரூ.2,291 கோடியாக தமிழக அரசுக்கு வழங்க மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும்' என, தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கை, ஆகஸ்ட் 1ம் தேதி உச்ச நீதிமன்றம் விசாரிக்கிறது. தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய், நீதிபதி வினோத் சந்திரன் ஆகியோர் அமர்வில் விசாரணைக்கு வர உள்ளது.

செங்கோட்டை நகராட்சி
தென்காசி மாவட்டம்

| | | |
|---|---|---|
| | செங்கோட்டை நகராட்சி திட்டப்பணிகள் | |
| 1. | ரூ.4.04 கோடி மதிப்பீட்டில் 15.65 கி.மீ. நீளத்திற்கு 55 சாலைகள் முடிக்கப்பட்டுள்ளன. | |
| 2. | திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு 13 வாகனங்கள் ரூ. 0.31 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. | |
| 3. | 948 LED விளக்குகள் ரூ. 0.93 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது. | |
| 4. | ஒரு குடிநீர் மராமத்துப் பணி ரூ.0.32 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது. | |
| 5. | நீர்நிலை மேம்பாட்டு பணி ரூ.0.28 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது. | |
| 6. | 3 பூங்காக்கள் அபிவிருத்தி ரூ. 1.98 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது. | |
| 7. | ஒரு நவீன எரிவாயு தகன மேடை ரூ. 1.45 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது. | |
| 8. | பேருந்து நிலையம் ரூ. 2.88 கோடி மதிப்பீட்டில் மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. | |
| 9. | 2 சந்தை பணிகள் ரூ. 4.44 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது. | |
| 10. | புதிய பள்ளி கட்டிடங்களும் பள்ளி கட்டிட மராமத்துப் பணிகளும் ரூ. 0.28 கோடி மதிப்பீட்டில் 2 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. | |
| 11. | தனி நபர் கழிப்பறை, பொது கழிப்பறை, சமுதாய கழிப்பறை, உயிரி அகழ்வு நுண்ணுரமையங்கள் பொருள் மீட்பு மையங்கள் அமைக்க ரூ. 2.1 கோடி மதிப்பீட்டில் 48 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. | |
| 12. | கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ரூ. 7.65 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது. | |
| 13. | 8 இதர பணிகள் ரூ. 1.68 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது. மேலும் கடந்த நான்கு ஆண்டுகளில் பொதுநிதியின் கீழ் ரூ. 0.39 கோடி மதிப்பீட்டில் 6 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. | |
| | ஆக மொத்தம் கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ. 28.10 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | |

ரா.ராமலெட்சுமி
நகர்மன்ற தலைவர்

சு.நவநீத கிருஷ்ணன்
நகர்மன்ற துணைத் தலைவர்

K.புனிதன் M.A.,B.Ed.,
ஆணையாளர்

நகர்மன்ற உறுப்பினர்கள்....
க.சுப்பிரமணியன், R.சுடர்ஒளி, வி.சரஸ்வதி, பா.ஜெகன்நாதன், சே.பினாஷா, ம.இசக்கியம்மாள், சா.முகம்மது ரஹீம், அ.மேரி, ஷா.பேபிரஜப் பாத்திமா, கோ.சரவண கார்த்திகை, மு.இசக்கிதுரை பாண்டியன், ச.இந்துமதி, ரா.பொன்னுலிங்கம், கு.சந்திரா, க.முருகையா, அ.ராம்குமார், க.ராதா, வே.முத்துப்பாண்டி, மு.செல்வகுமாரி, மா.சுகந்தி, ந.வேம்புராஜ், .செண்பகராஜன்


## வர்த்தக செய்திகள்

### மூப்பில் வாய் சுகாதாரம் மிக முக்கியம் டாக்டர் சோனியா தத்தா ஆலோசனை




பொதுச் சுகாதார பல் மருத்துவத்தில் பேராசிரியராக பணியாற்றும் டாக்டர் சோனியா தத்தா கூறுகையில், ஒவ்வொரு வாழ்க்கைப் பருவத்திலும் நல்ல வாய் சுகாதாரத்தை பராமரிப்பது அவசியம். ஆனால் வயதானால் அதன் தேவைகள் மாறக்கூடும். மூப்பியவர்கள் தனிப்பட்ட சவால்களை எதிர்கொள்வதுடன், அவை வாய் சுகாதாரத்தையும், உடல்நலத்தையும் பாதிக்கக்கூடும். மூப்பியோருக்கான பொதுவான வாய்ச் சுகாதார சிக்கல்களில், வயதுக்கு வரும்போது, நம் ஈறுகள் பின்னோக்கி குறைய வாய்ப்பு இருக்கிறது. இது பல் வேர்கள் வெளியே தெரியும் நிலையை உருவாக்கி உணர்வுணர்ச்சியை அதிகரிக்கலாம். 'டிரை மவுத்' எனப்படும் வாய் உலர்வது, பெரும்பாலும் மருந்துகள் அல்லது நோய்கள் காரணமாக ஏற்படுகிறது. இது பல் அழுகலும் ஈறு நோய்களும் ஏற்படும் அபாயத்தை பெரிதும் உயர்த்துகிறது. சில மருந்துகள், சுவை உணர்வு மாறுவது, வாயின் பாதிப்புகள் அதிகரிப்பது போன்ற பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும். பல ஆண்டுகளாக பயன்பட்ட எனாமல் பலவீனமடைவதால் பல் அழுகல் எளிதாக நடக்கலாம். பல்லடைகள் (டென்சர்கள்) பயன்படுத்தப்படுகின்றனவென்றால், அவற்றை சரியான முறையில் பராமரிக்க வேண்டும். மூப்பில் பல் மருத்துவர் பரிசோதனை மிகவும் அவசியமாகிறது. வயதான பற்கள் மற்றும் ஈறுகளுக்கான ஆயுர்வேத நன்மையில், வயதான பல் சுகாதாரத்தை பராமரிக்க டாபூர் ரெட் பேஸ்ட் ஒரு இயற்கையான ஆதரவு முறையை வழங்குகிறது. அதில் உள்ள ஆயுர்வேதக் கூட்டமைப்பு, கிராம்பு மற்றும் வேப்பம் போன்ற இயற்கை மூலிகைகளால் பல்லும் ஈறுகளும் பலமடையும். கிராம்பின் அழற்சி நீக்கும் பண்புகள் உணர்வுணர்ச்சியுள்ள ஈறுகளை அமைதியாக்குகின்றன. வேப்பத்தின் கிருமி நாசினி செயல்பாடு பல் அழுகலும் ஈறு நோய்களையும் ஏற்படுத்தும் பாக்டீரியாக்களை கட்டுப்படுத்துகிறது. இந்த இயற்கை மூலிகைகள் கொண்ட டாபூர் ரெட் பேஸ்ட் மூப்பியோரின் வாய்ச் சுகாதாரத்தை மேம்படுத்த உதவுகிறது. இந்திய பல் மருத்துவசங்கத்தின் அங்கீகாரம் இதன் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துகிறது, என்றார்.

### 12,000 ஊழியர்களை நீக்க டி.சி.எல் முடிவு; மத்திய அரசு பேச்சுவார்த்தை




டி.சி.எஸ்., நிறுவனத்தில் இருந்து 12,000 பணியாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட உள்ள விவகாரத்தை உன்னிப்பாக கவனித்து வருவதாக மத்திய தகவல் தொழில்நுட்ப (ஐ.டி.,) துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இது குறித்து அதிகாரிகளை மேற்கோள் காட்டி பி.டி.ஐ., வட்டாரங்கள் கூறுகையில், 'இந்தியாவின் முதன்மையான ஐ.டி., சேவை நிறுவனமான டிசிஎஸ் இந்த ஆண்டு தனது உலகளாவிய பணியாளர்களில் 2 சதவீதத்தை குறைக்க உள்ளதாக அறிவித்துள்ளது. அதன்படி, அந்த நிறுவனம் 12,261 ஊழியர்களை பணியிலிருந்து நீக்க முடிவு செய்துள்ளது. டி.சி.எல்., நிறுவனத்தின் இந்த அறிவிப்பு தகவல் தொழில்நுட்ப உலகில் மிகப்பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த விவகாரத்தை மத்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் மிகவும் உன்னிப்பாக கண்காணித்து வருகிறது. மேலும், இது தொடர்பாக டிசிஎஸ் நிறுவனத்துடன் ஐடி அமைச்சகம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது. பணி நீக்க அறிவிப்புக்கு காரணமான பின்னணி என்ன என்பதை அறியும் முயற்சியில் ஐ.டி., அமைச்சகம் ஈடுபட்டுள்ளது' என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஊராட்சி பகுதியில் தொழில் தொடங்க உரிம கட்டணம் மாற்றியமைப்பு

ஊராட்சி பகுதிகளில் எந்தெந்த தொழில் தொடங்க உரிமம் பெற வேண்டும் என்ற பட்டியலை அரசு வெளியிட்டுள்ளது. தமிழக ஊராட்சிகளுக்குட்பட்ட பகுதிகளில் தொழில் தொடங்க உரிமம் பெறுவதற்கான கட்டணம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து ஊராட்சி சட்டங்களில் திருத்தம் செய்யப்பட்டு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த நிலையில், எந்தெந்த தொழிலுக்கு உரிமம் பெற வேண்டும் என்ற பட்டியலை அரசு வெளியிட்டுள்ளது. அதன்படி தையல் பொருட்கள், தையல் இயந்திரங்கள் உற்பத்தி, அனைத்து வகையான மின் மற்றும் மின்னணு பொருட்களின் உற்பத்தி, மின்சார மோட்டார்கள் மற்றும் பம்புகளின் உற்பத்தி, மின்சார மோட்டார்கள் மற்றும் பம்புகளை சேமித்து விற்பனை செய்தல், கல் வெட்டுதல், காகித பொருட்கள் உற்பத்தி, அனைத்து வகையான உலோகங்களின் உற்பத்தி, பாத்திரங்கள் மற்றும் பாத்திரங்களை உற்பத்தி செய்தல், மோட்டார்கள் மற்றும் பம்புகளின் உற்பத்தி, தொழில் துறை இயந்திரங்களின் உற்பத்தி, மோட்டார் வாகன பாகங்கள் உற்பத்தி, கட்டுமான பொருட்களின் உற்பத்தி, பொறியியல் பணிகள், செங்கல் அறைகள், ஆட்டோமொபைல் உதிரி பாகங்களை தயாரித்தல், அழகு சாதன பொருட்கள் உற்பத்தி, நாட்டுப்புற மருத்துவம், அழகுசாதன பொருட்கள் மற்றும் மூலிகை பொருட்கள் உற்பத்தி, கட்டுமானப் பணிகள் உட்பட 48 தொழில்களுக்கு உரிமம் பெற வேண்டும். கடைகளை பொறுத்தவரை 119 சேவை தொழில்களாக பட்டியலிட்டு உள்ளனர். அதில் பேன்சி கடைகள், சைக்கிள் பழுது பார்க்கும் கடைகள், பல்பொருள் அங்காடிகள், ஜெராக்ஸ் கடை, போட்டோ பிரேமிங். பொற்கொல்லர்கள், கிரானைட் கடைகள், சலூன்கள், தையலகம், சலவையகம், காலணி, மொபைல், சைக்கிள் கடைகள், அச்சகம், ஜவுளி, நகைக்கடை, சாமில்ஸ், அரிசி ஆலைகள், இறைச்சி – மீன் கடைகள், உணவு பொருள் தயாரித்தல், நாட்டு மருந்து கடை, அழுகு சாதன பொருட்கள், மருந்து கடை, டீ கடை, வாட்ச் கடை, பார்சல் சேவை, கூரியர் சேவை உள்ளிட்ட 119 கடைகள் அரசு வெளியிட்ட பட்டியலில் இடம்பெற்றுள்ளன.



## 20 - 25% வரி!

இந்தியா – அமெரிக்கா இடையிலான வர்த்தக ஒப்பந்தம் எட்டப்படாவிட்டால் இந்தியாவுக்கு 20 முதல் 25 சதவீத வரி விதிக்கப்படும் என, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



## ✦ வர்த்தக ஒப்பந்தம் எட்டப்படாவிட்டால்... ✦ இந்தியாவுக்கு டிரம்ப் எச்சரிக்கை

**வாஷிங்டன், ஜூலை 30-**

அமெரிக்க அதிபராக டொனால்டு டிரம்ப் கடந்த ஜனவரி மாதம் பதவியேற்றார். அப்போது, உலக நாடுகளின் பொருட்களுக்கான இறக்குமதி வரி பட்டியலை வெளியிட்டார். இது உலக நாடுகளை அதிர்ச்சியடைய வைத்தது. பின்னர் இந்த புதிய வரி விதிப்பு 90 நாட்களுக்கு நிறுத்தி வைப்பதாக அறிவித்தார். அதன்படி, கடந்த ஜூலை 9ம் தேதி கெடு முடிய இருந்த நிலையில், ஆக., 1ம் தேதி வரை நீட்டித்தார்.



இதனிடையே, பல்வேறு நாடுகள் அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்வது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன. இதில், ஜப்பான், இங்கிலாந்து, ஐரோப்பிய யூனியன் உள்ளிட்டவற்றுடன் ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. அதுபோல இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்து கொள்வது தொடர்பாக இதுவரை ஐந்து சுற்று பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது. வரி விதிப்பு அமலாவதற்கான காலக்கெடு (ஆகஸ்ட் 1) நெருங்கிவிட்ட நிலையில், இரு நாடுகளுக்கிடையே இடைக்கால ஒப்பந்தம் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில், இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் குறித்து 6வது சுற்று பேச்சுவார்த்தை விரைவில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில், இந்தியாவுடனான வர்த்தக ஒப்பந்தம் இன்னும் இறுதி செய்யப்படவில்லை, என அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறியுள்ளார். இது குறித்து நிருபர்கள் சந்திப்பில் டிரம்ப் கூறுகையில், இந்தியா-அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம் குறித்த பேச்சு வார்த்தைகள் சிறப்பாக நடந்து வருகிறது. இந்தியாவுடனான ஒப்பந்தம் இன்னும் இறுதி செய்யப்படவில்லை. ஒப்பந்தம் இறுதி செய்யப்படவில்லை என்றால், இந்தியாவுக்கு 20 சதவீதம் முதல் 25 சதவீதம் வரை வரி விதிக்கப்படும்.

இந்தியா ஒரு நல்ல நண்பராக இருந்து வருகிறது. எனது வேண்டுகோளின் பேரில் அவர்கள் பாகிஸ்தானுடனான போரை முடிவுக்கு கொண்டு வந்தனர். மற்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது இந்தியா அமெரிக்கா மீது அதிக வரிகளை விதித்து வருகிறது. இவை அனைத்தும் விரைவில் முடிவுக்கு வரும்.

ஆகஸ்ட் 15ம் தேதிக்கு பிறகு, அமெரிக்க பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்க இந்தியா திட்டமிட்டுள்ளது. ஐந்து சுற்று வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் நடந்ததை கருத்தில் கொண்டு, இது ஒரு தற்காலிக நடவடிக்கையாக இருக்கும் என்று நாங்கள் கருதுகிறோம். விரைவில் ஒரு ஒப்பந்தம் எட்டப்படும், என்றார்.

முன்னதாக, அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்ளாத அனைத்து நாடுகளுக்கும் 15 அல்லது 20 சதவீதம் மட்டுமே வரி விதிப்பது குறித்து பரிசீலித்து வந்த நிலையில், கனடாவுக்கு 35 சதவீதமும், அல்ஜீரியா, இலங்கை மற்றும் ஈராக் ஆகிய நாடுகளுக்கு 30 சதவீத வரியும், புரூணே, லிபியா மற்றும் மால்டோவா ஆகிய நாடுகளுக்கு 25 சதவீதமும், பிலிப்பைன்சுக்கு 20 சதவீதமும் டிரம்ப் அதிரடியாக வரி விதித்தது குறிப்பிடத்தக்கது.

## ரஷ்யாவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்: ரஷ்யா, ஜப்பானை சுனாமி தாக்கியது!



**டோக்கியோ, ஜூலை 30-**

ரஷ்யாவின் கம்சாட்கா தீபகற்ப பகுதிக்கு அருகில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதை அடுத்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக ஜப்பான் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் கம்சாட்கா தீபகற்ப பகுதிக்கு அருகில், இன்று (புதன்கிழமை) காலை 8:25 மணிக்கு பூமிக்கு அடியில் 20 கி.மீட்டர் ஆழத்தில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 8.7 ஆக பதிவாகியுள்ளதாக ஜப்பானின் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஜப்பானின் கடலோர பகுதிகளில் 3 அடி உயரத்திற்கு கடலலைகள் எழும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதையடுத்து ஜப்பானின் பசிபிக் கடற்கரையில் ஒரு மீட்டர் வரை சுனாமி ஏற்பட வாய்ப்புள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட உயிர்ச்சேதம் மற்றும் பொருள்சேதம் குறித்த தகவல் உடனடியாக வெளியாகவில்லை. ஜப்பானின் நான்கு பெரிய தீவுகளில் வடக்கே உள்ள ஹொக்கைடோவிலிருந்து சுமார் 250 கிலோமீட்டர் தொலைவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. மேலும், இது 3 கிலோ மீட்டர் ஆழத்தில் தாக்கியதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஆரம்ப அறிக்கைகளுக்குப் பின்னர், நிலநடுக்கத்தின் அளவு 8 ஆக இருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு தெரிவித்துள்ளது. கம்சாட்கா பகுதியில் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து ரஷியாவிடமிருந்து உடனடித் தகவல் எதுவும் வெளியாகவில்லை.

இதையடுத்து பசிபிக் முழுவதும் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அலாஸ்கா அலூடியன் தீவுகளின் சில பகுதிகளுக்கு சுனாமி எச்சரிக்கையையும், கலிபோர்னியா, ஓரிகான் மற்றும் வாஷிங்டன் மற்றும் ஹவாய் உள்ளிட்ட மேற்கு கடற்கரையின் சில பகுதிகள் சுனாமி கண்காணிப்பையும் வெளியிட்டுள்ளது. மேலும், பசிபிக் கடற்கரையை 3 மீட்டர் உயரத்திற்கு அலைகள் தாக்கக்கூடும் என எச்சரித்துள்ளது.

இதனிடையே, சுனாமி அலைகள், ஜப்பான் மற்றும் ரஷ்ய கடற்கரை பகுதிகளை தாக்கும் வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. அந்த வீடியோவில் கடல் அலைகள் கடற்கரையில் இருக்கும் படகுகள் மற்றும் மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் தாக்கப்படும் காட்சிகள் இடம் பெற்றுள்ளது.

நில நடுக்கத்தைத் தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டதால் ரஷ்யாவின் பசிபிக் கடற்கரையோர பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிகுந்த அச்சத்தில் உள்ளனர்.

## காதல் விவகாரத்தில் கல்லூரி மாணவர் கொலை காரை ஏற்றிய தி.மு.க., கவுன்சிலரின் பேரன் கைது

**சென்னை, ஜூலை 30-**

சென்னை, அயனாவரம், முத்தம்மன் தெருவைச் சேர்ந்தவர், நித்தின் சாய் (20). இவர், மயிலாப்பூரில் உள்ள தனியார் கல்லூரி ஒன்றில், மூன்றாம் ஆண்டு ஆங்கில இலக்கியம் படித்து வந்தார். அதேபோல், அயனாவரம் பி.இ., கோவில் தெருவைச் சேர்ந்தவர் அபிஷேக் (20). இவரும், அதே கல்லூரியில் படித்து வருகிறார்.

நித்தின் சாய் மற்றும் அபிஷேக் ஆகியோர் நண்பர்கள். இவர்கள், நேற்று முன்தினம் இரவு 10:30 மணிக்கு, திருமங்கலம் பள்ளி சாலையில், பள்ளித் தோழன் மோகனின் பிறந்த நாளை கொண்டாடியுள்ளனர். அதே பகுதியில் உள்ள ராவுத்தர் பிரியாணி கடையில் சாப்பிட்டனர். அதன் பின், ஹோண்டா ஆக்டிவா ஸ்கூட்டரை அபிஷேக் ஓட்ட, பின்னால் நித்தின் சாய் அமர்ந்து, ஹெல்மெட் அணியாமல் சென்றார். திருமங்கலம் பள்ளி சாலையில் இருந்து பார்க் சாலை நோக்கி இருவரும் சென்றுள்ளனர்.



நிதின்சாய்
கொல்லப்பட்டவர்



சந்துரு
கைதானவர்

அதே பகுதியில் உள்ள தனியார் பள்ளி அருகே சென்றபோது, பின்னால் வந்த கார் மோதியது. இதில், பள்ளி சுவரில் தூக்கி வீசப்பட்டு, நித்தின் சாய்க்கு தலை, மார்பு பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டு, சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அபிஷேக் படுகாயமடைந்தார்.

தகவல் அறிந்து, திருமங்கலம் போக்குவரத்து புலனாய்வு பிரிவு போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். நித்தின் சாய் உடலை மீட்டு, 108 ஆம்புலன்ஸ் வாயிலாக, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மருத்துவர்களின் பரிசோதனையில், நித்தின் சாய் ஏற்கனவே உயிரிழந்தது தெரிந்தது. அபிஷேக், அதே மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டார்.

போலீசாரும் விபத்து என, வழக்குப் பதிந்தனர். கார் மோதியதில் நொறுங்கிய இரு சக்கர வாகனத்தையும் பறிமுதல் செய்தனர். விபத்து ஏற்படுத்திய காரை போலீசார் தேடி வந்தனர். இந்த நிலையில், திருமங்கலம் போக்குவரத்து புலனாய்வு பிரிவில், நித்தின் சாயின் தந்தை சுரேஷ் என்பவர், புகார் மனு ஒன்றை அளித்தார். அதில், என் மகன் சொகுசு காரை ஏற்றி கொலை செய்யப்பட்டுள்ளார்.

இதன் பின்னணியில், தி.மு.க., கவுன்சிலர் கே.கே.நகர் தனசேகரனின் மகள் வழி பேரன் சந்துரு உள்ளார். விரிவான விசாரணை நடத்த வேண்டும் என, கூறியிருந்தார். இதையடுத்து, இந்த வழக்கு திருமங்கலம் சட்டம் - ஒழுங்கு காவல் நிலைய போலீசாருக்கு மாற்றப்பட்டது. போலீசார் சம்பவ இடத்தில் உள்ள, சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்தனர். அப்போது, இது திட்டமிட்ட கொலை என, தெரிந்தது.

சிசிடிவி பதிவில், நித்தின் சாய், அபிஷேக் இருவரும் சென்ற இரு சக்கர வாகனம் மீது, ரேஞ்ச் ரோவர் கார் ஒன்று மோதியதும், இருவரும் தனியார் பள்ளி சுற்றுச்சுவரில் தூக்கி வீசப்பட்டு, நித்தின்சாய் சாலை ஓரமாக விழுந்ததும் தெரிந்தது.

அப்போது, ரேஞ்ச் ரோவர் காரை ரிவர்ஸ் எடுத்து, நித்தின் சாய் மீது மீண்டும் ஏற்றும் காட்சிகள் பதிவாகி இருப்பதை போலீசார் கண்டறிந்தனர்.

இதைஅடுத்து, திருமங்கலம் போலீசார், சந்துரு மற்றும் அவரது கூட்டாளிகள் மீது ஐந்து பிரிவுகளின் கீழ் போலீசார் வழக்கு பதிவு செய்து, சந்துருவை கைது செய்தனர். போலீசார் விசாரணையில், காதல் விவகாரத்தில், இந்த கொலை நடந்தது தெரிந்தது.

**IN THE COURT OF THE SMALL CAUSES COURT VI AT CHENNAI**
**M.C.O.P. NO. 763 OF 2025**

எஸ்.கருமாரியம்மாள்
மற்றும் பலர்
மனுதாரர்கள்
எதிர்
ரவி மற்றும் ஒருவர்
எதிர்மனுதாரர்கள்

பெறுநர்.
முதல் எதிர்மனுதாரர் :
எ.ரவி, த/பெ. எத்திராஜ்
திருவள்ளூர்தெரு. பாலகிருஷ்ணா நகர், திருவொற்றியூர், சென்னை.600019.

மேற்படி வழக்கில் முதல் எதிர் மனுதாரரும் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் உரிமையாளரான ரவி என்பவர் மீது மேற்படி மனுதாரர் நஷ்ட ஈடு கோரிய வழக்கில் வரும் 26.09.2025–ம் தேதி அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. எனவே அன்று காலை 10.30 மணியளவில் மேற்படி நீதிமன்றத்தில் தாங்கள் நேரிலோ (அ) வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்களுக்கு ஆட்சேபனை ஏதேனும் இருந்தால் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். தவறினால் தங்கள் மீது ஒரு தலைபட்சமாகத் தீர்ப்பாகும் என்பதை இதன் மூலம் அறியவும்.

**திரு.சரத் குமார்**
**மனுதாரரின்வழக்கறிஞர்**

**ஐந்தாவது நீதிபதி மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டுக் கோருரிமை தீர்ப்பாயம், சென்னை.**
**M.C.O.P. No.1379/2025**

விஜய் குமார்
மனுதாரர்
எதிர்
1.அகமது அஷ்ரப்
2.தி நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
எதிர்மனுதாரர்கள்

பெறுநர்:
அகமது அஷ்ரப்
கிரீன் வேலி கவுண்டர் பரபானி சி செக்டர்

மேற்கண்ட விபத்து இழப்பீட்டு வழக்கு தங்கள் வருகைக்காக வரும் 8/9/2025 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அன்றைய தினம் காலை 10.30 மணிக்கு மேற்கண்ட நீதிமன்றத்தில் தாங்கள் நேரிலோ அல்லது தங்கள் வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டும். தவறினால் தீர்ப்பு தங்களுக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக வழங்கப்படும் என்பதை அறியவும்.

**திரு. த.ஆறுமுகம்,**
**மனுதாரரின் வழக்கறிஞர்.**

**இரண்டாவது சிறப்பு நீதிபதி மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டுக் கோருரிமை தீர்ப்பாயம், சென்னை.**
**M.C.O.P.No.6617/2024**

நீலவேணி வேடியான்
மனுதாரர்
எதிர்
1.எஸ்.ராஜ்குமார்
2.ஃபுயுச்சர் ஜெனரலி இந்தியா இன்சூரன்ஸ்
எதிர்மனுதாரர்கள்

பெறுநர்:–
எஸ்.ராஜ்குமார் , எண். 153/17. சண்முகம்புரம், காமராஜன் சாலை, ராஜா அண்ணாமலை புரம், சென்னை 600028

மேற்கண்ட விபத்து இழப்பீட்டு வழக்கு தங்கள் வருகைக்காக வரும் 29.08.2025 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அன்றைய தினம் காலை 10.30 மணிக்கு மேற்கண்ட நீதிமன்றத்தில் தாங்கள் நேரிலோ அல்லது தங்கள் வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டும். தவறினால் தீர்ப்பு தங்களுக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக வழங்கப்படும் என்பதை அறியவும்.

**திரு. த.ஆறுமுகம்,**
**மனுதாரரின் வழக்கறிஞர்.**

**இரண்டாவது நீதிபதி மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டுக் கோருரிமை தீர்ப்பாயம், சென்னை.**
**M.C.O.P. No.5497/2023**

யோகேஸ்வரன்
மனுதாரர்
எதிர்
1.கார்த்திக்.ஜி
2.சோழமண்டலம் எம் எஸ் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி
எதிர்மனுதாரர்கள்

பெறுநர்:
கார்த்திக்.ஜி
எண். 12. பெருமாள் கோயில் தெரு, குடபாக்கம் திருவள்ளூர் 600124

மேற்கண்ட விபத்து இழப்பீட்டு வழக்கு தங்கள் வருகைக்காக வரும் 12.08.2025 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அன்றைய தினம் காலை 10.30 மணிக்கு மேற்கண்ட நீதிமன்றத்தில் தாங்கள் நேரிலோ அல்லது தங்கள் வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டும். தவறினால் தீர்ப்பு தங்களுக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக வழங்கப்படும் என்பதை அறியவும்.

**திரு. த.ஆறுமுகம்,**
**மனுதாரரின் வழக்கறிஞர்.**

**IN THE COURT OF THE XVI ASST CITY CIVIL AT CHENNAAI**
**O.S.No. 7844 of 2019**

STATE BANK OF INDIA
R.A.C.P. Centre Anna Nagar,
Chennai.600 102
Plaintiff.
Vs
B.Udayakumar
No. 74, Sivakami Nagar,
New Washermenpet,
Chennai.600081
Balakrishnan
No. 74, Sivakami Nagar,
New Washermenpet,
Chennai.600081.
Defendants

The Plaintiff here in filed the above Suit Under Order 37 Rule 1 and 2 of C.P.C. for Recovery of money along with costs. The Hon'ble XVIth ASST CITY CIVIL JUDGE ordered publication against the Defendants here in returnable by 18.08.2025. So make it convenient to be present before the above said court on 18.08.2025 at 10.15 A.M. either in person or through your authorized representative to make your objections if any, otherwise the above suit will be heard in your absence and appropriate orders will be passed on merits.

**NATTARAJAN GOPINATH**
**(Counsel For Plaintiff)**

**IN THE COURT OF THE VI ASST CITY CIVIL AT CHENNAI**
**O.S.No.2623 of 2023**

STATE BANK OF INDIA
Ashok Nagar Branch,
Ashok Nagar, Chennai.600 102
Plaintiff.
Vs
Vijay Krishnamoorthi
S/o K.Krishna Moorthy
No. 28/34, Subburama Iyer Street, Saidapet, Kagitha partarai Sub Post Office, Vellore, PIN 632 012,
Defendant

The Plaintiff here in filed the above Suit Under Order 37 Rule 1 and 2 of C.P.C. for Recovery of money along with costs. The Hon'ble VIth ASST CITY CIVIL JUDGE ordered publication against the Defendant here in returnable by 8.08.2025. So make it convenient to be present before the above said court on 8.08.2025 at 10.15A.M. either in person or through your authorized representative to make your objections if any, otherwise the above suit will be heard in your absence and appropriate orders will be passed on merits.

**NATTARAJAN GOPINATH**
**(Counsel For Plaintiff)**

# 1967, 1977 போன்று 2026ம் ஆண்டு தேர்தல் அமையும்; விஜய்



**சென்னை, ஜூலை 30-**

தமிழக வெற்றிக் கழகத்தின் உறுப்பினர் சேர்க்கைக்கான பிரத்யேகச் செயலி அக்கட்சியால் வெளியிடப்பட்டுள்ளது. இதனை அக்கட்சியின் தலைவர் விஜய் இன்று (30ம் தேதி) அறிமுகம் செய்தார். இதில், த.வெ.க., மாநில, மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் விஜய் பேசுகையில், இதற்கு முன்னால் தமிழக அரசியலில் நடந்த மிகப் பெரிய இரண்டு தேர்தல்களைப் போல 2026 தேர்தலும் அமையப் போகிறது. அந்த இரண்டு மாபெரும் தேர்தல்களில் ஏற்கனவே தொடர்ந்து ஜெயித்துக் கொண்டிருந்த அதிகார பலம், அசுர பலம் அனைத்தையும் எதிர்த்து நின்றுதான் புதிதாக வந்தவர்கள் ஜெயித்தனர். ஊருக்கு ஊர், வீதிக்கு வீதி, வீட்டுக்கு வீடு என்ற அனைத்து மக்களையும் சந்தித்தனர்.

அண்ணா சொன்ன அதே விஷயத்தை நானும் இங்கே சொல்ல விரும்புகிறேன். மக்களிடம் செல், மக்களிடமிருந்து கற்றுக் கொள், மக்களுடன் வாழ், மக்களுடன் சேர்ந்து திட்டமிடு. இதைச் சரியாக செய்தாலே போதும். அதனால் தான் இந்தச் செயலியை அறிமுகப்படுத்துவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இதன் பிறகு மதுரை மாநாடு, மக்கள் சந்திப்பு, பயணம் என மக்களோடு மக்களாகத்தான் இருக்கப் போகிறோம். நம்முடன் மக்கள் இருக்கிறார்கள். நல்லதே நினைப்போம். நல்லதே நடக்கும். வெற்றி நிச்சயம், என்றார்.

முன்னதாக வெற்றிப் பேரணியில் தமிழ்நாடு என்ற இந்த உறுப்பினர் சேர்க்கைக்கான செயலியை வெளியிட்ட விஜய், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று தலைமுறையினருக்கு த.வெ.க., உறுப்பினர் அட்டையை வழங்கினார்.

# உலக சதுப்பு நில தினம்: மரக்கன்றுகளை நட்டது எஸ்.ஆர்.எம்.,



**சென்னை, ஜூலை 30-**

உலக சதுப்பு நில தினத்தை கொண்டாடும் வகையில், கடந்த 26ம் தேதி, கோவளம் கடற்கரை பகுதியில், மாபெரும் சதுப்பு நில மரக்கன்றுகள் நடும் நிகழ்வு மேற்கொள்ளப்பட்டது. இதனை, காட்டாங்குளத்தூரிலுள்ள எஸ்.ஆர்.எம்., அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் சிவில் இன்ஜினியரிங் துறை, இந்தியப் பெருங்கடல் சங்கம், தேசிய கடலோர ஆராய்ச்சி மையம், தி மாங்குரோவ் பவுண்டேஷன் ஆஃப் இந்தியா, 4டி ஆப்ஸ் சொல்யூஷன்ஸ் நிறுவனம் மற்றும் தமிழக அரசின் வனத்துறை ஆகியவற்றுடன் இணைந்து நடத்தியது.

நிகழ்ச்சியை தேசிய கடலோர ஆராய்ச்சி மையத்தின் இயக்குனரும், விஞ்ஞானியுமான டாக்டர் ஆர்.எஸ். கங்கரா முறைப்படி தொடங்கி வைத்தார். கடலோர வனப் பாதுகாப்புக் குழு பிரிவு வனச்சரகர் பொன் செந்தில் தலைமை வகித்து, முதல் மரக்கன்றை நட்டார். இந்தியப் பெருங்கடல் சங்கத்தின் சென்னை பிரிவுத் தலைவரும், என்.சி.சி.ஆர்., மையத்தின் விஞ்ஞானியுமான டாக்டர் டியூன் உஷா மற்றும் அதன் துணைத் தலைவரும், என்.ஐ.ஓ.டி., மையத்தின் விஞ்ஞானியுமான ஜோஷியா ஜோசப், அதன் செயலரும், என்.ஐ.ஓ.டி., மையத்தின் விஞ்ஞானியுமான கே.திருமுருகன் உள்ளிட்ட பலர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றனர்.

இந்த கூட்டு முயற்சி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மீள்தன்மையை மேம்படுத்துவதில் சதுப்பு நில சுற்றுச்சூழல் அமைப்புகளின் முக்கிய பங்கை எடுத்துக்காட்டியது. கடலோரப் பாதுகாப்பு, அரிப்புக் கட்டுப்பாடு, பல்லுயிர் பாதுகாப்பு ஆகியவற்றில் சதுப்பு நிலங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மேலும் தீவிர வானிலை, நிகழ்வுகளுக்கு எதிராக இயற்கையான இடையகங்களாக செயல்படுகின்றன. இதனால் அவை கடலோரப் பகுதிகளின் நிலைத்தன்மைக்கு அவசியமானவை. இந்த முயற்சியின் ஒரு பகுதியாக, கோவளம் கடல் பகுதியில் 1,350 சதுப்புநில மரக்கன்றுகள் நடப்பட்டன. இந்த மரக்கன்றுகள் நடும் நிகழ்வில், எஸ்.ஆர்.எம்., பல்கலைக் கழகம் காட்டாங்குளத்தூர், அண்ணா பல்கலைக் கழகம், எஸ்.ஆர்.எம்., வள்ளியம்மை பொறியியல் கல்லூரி மற்றும் பிற நிறுவனங்கள், சுற்றுச்சூழல் தன்னார்வலர்கள் மற்றும் அப்பகுதியில் வசிப்போர் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

# கடலாடி குளத்தில், 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்



**செஞ்சி, ஜூலை 30-**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் கடலாடி குளம் கிராமத்தில், 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம் நடைபெற்றது.

ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். வட்டார வளர்ச்சி அலுவலர் நடராஜன் அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., கலந்து கொண்டு உங்களுடன் ஸ்டாலின் முகாமை தொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அறிவுறுத்தினார்.

முன்னதாக, உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் அனைத்து துறை சார்பில் பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் குறித்து முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., நேரில் சென்று பார்வையிட்டு பொதுமக்களிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். தொடர்ந்து வேளாண் தோட்டக்கலை துறை சார்பில் விவசாயிகளுக்கு பழ மரக்கன்றுகளையும் விதைகளையும் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., வழங்கினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ., செந்தமிழ் செல்வன், மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன், வட்டார வளர்ச்சி அலுவலர் பிரபா சங்கர், மாவட்ட கவுன்சிலர் அகிலா பார்த்திபன், ஒன்றிய கவுன்சிலர்கள் சாவித்திரிகோவிந்தராஜன், புவனா செந்தில் குமரன், டிலைட் ஆரோக்கியராஜ், ஊராட்சி மன்ற தலைவர்கள் நிலாவதி பஞ்சாட்சரம், அஞ்சலை செல்வகுமார், காசிநாதன், சந்தானம் மற்றும் பலர் கலந்து கொண்டனர். துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பழனி நன்றி கூறினார்.

# காட்டுமன்னார்கோவிலில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம்



**கா.கோவில், ஜூலை 30-**

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவிலில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் நடைபெற்றது. வட்டாரவளர்ச்சி அலுவலர் சங்கர் தலைமை தாங்கினார். வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜசேகர், கல்விக்குழு உறுப்பினர் பழஞ்ச நல்லூர் பாஸ்கர், நாட்டார்மங்கலம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சுதா மணிரத்தினம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் பழஞ்சநல்லூர், நாட்டார்மங்கலம் ஊராட்சிகளில் இருந்து கிராம பொதுமக்கள் கலந்து கொண்டு மகளிர் உதவித்தொகை மற்றும் 43 திட்டங்களின் மூலம் பயன்பெறுவதற்காக அந்தந்த துறை அலுவலர்களிடம் மனுக்களை வழங்கினார். இதில், தலைமை இடத்து துணை தாசில்தார் சங்கர் மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் மற்றும் பல்வேறு துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதில் கலந்து கொண்ட சமூகபாதுகாப்பு வட்டாட்சியர் முகமது அசேன் இந்தத் திட்டத்தின் மூலம் மனுக்களை கொடுக்கும் மக்களை பார்க்காமல் முகாமில் தனது மொபைல் போனை தொடர்ந்து பார்த்து வந்ததால் பொது மக்கள் மிகவும் சிரமப்பட்டனர். முகாமிற்கு வந்தவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைக்கு மூன்று மணிக்கு மேல் மனு அளிக்கும் முற்பட்டனர். சமூகநல வட்டாட்சியர் மூன்று மணிக்கு மேல் மனுக்கள் வாங்க முடியாது என பொது மக்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

இதனால் முகாமில் இருந்த ஒரு நபர் காட்டுமன்னார்கோவில் வட்டாட்சியர் பிரகாஷுக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்தார். வட்டாட்சியர் தலையீட்டின் பேரில் மீண்டும் மனுக்கள் பெறப்பட்டன.

# கும்பகோணம் அரசினர் மகளிர் கல்லூரியில் பேரவை துவக்க விழா



**கும்பகோணம், ஜூலை 30-**

கும்பகோணம் அரசினர் மகளிர் கல்லூரியில் (தன்னாட்சி) பேரவைத் தொடக்க விழா நடைபெற்றது.

கல்லூரி இணை பேராசிரியர், பேரவை பொறுப்பு, தமிழ் துறை தலைவர் சு.அகிலா வரவேற்புரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் பா.பிரமீளா, பேரவை பொறுப்பாளர்களின் பொறுப்புகளை விவரித்து, அவர்கள் கல்லூரி மாணவியரின் பிரதிபலிப்பாக இருக்க வேண்டுமென கேட்டுக் கொண்டார். தொடர்ந்து பேரவை பொறுப்பாளர்கள், தங்கள் பதவிகளை ஏற்றனர். பேரவைத் தலைவியாக பு.தனுஷ்ஸ்ரீ - விலங்கியல் துறை மூன்றாமாண்டு, துணைத் தலைவி சுபாஷினி - தமிழ் துறை மூன்றாமாண்டு முறையே பேரவைப் பொறுப்பாளர்கள் தங்கள் கையில் தீபத்துடனும் உறுதிமொழி கூறியும் பதவி ஏற்றனர். பின்னர் பேரவைத் தலைவி ஏற்புரையேற்றார். தொடர்ந்து கல்லூரியின் கடந்தாண்டு சாதனைகளை கொண்ட புல்லட்டீன் வெளியிடப்பட்டது. சிறப்பு விருந்தினராக இதயா மகளிர் கல்லூரி முதல்வர் யூஜின் அமலா சிறப்புரை ஆற்றினார். வேதியியல் மூன்றாமாண்டு பேரவை செயலாளர் பு.அஸ்வினி நன்றி கூறினார்.

**உட் கோட்ட நடுவர் வருவாய் கோட்டாச்சியர் அலுவலகம் இராமநாதபுரம்.**

**ந.க.அ 8/96/2025**

திருமதி.ஞானம், க/பெ.பாலுச்சாமி, 5/17, கிழக்கு தெரு, கீழவலசை கிராமம், ரெகுநாதபுரம், இராமநாதபுரம்.

மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி முகவரியில் வசிக்கும் மனுதாரர் ஆகிய நான், எனது தந்தை பொன்னுச்சாமி என்பவர் கடந்த 20.11.2006 தேதி அன்று இராமநாதபுரம் மாவட்டம், பட்டிணம்காத்தான், ஆதம் நகர், கதவு எண். 3/3071, முகவரியில் உள்ள எனது தம்பி இல்லத்தில் இறந்ததை அறியாமையின் காரணமாக பதிவு செய்யத் தவறி விட்டேன். ஆகவே தற்பொழுது இராமநாதபுரம் வருவாய் கோட்டாச்சியர் நடுவர் நீதிமன்றத்தில் அவர் இறந்ததை பதிவு செய்ய மனுத்தாக்கல் செய்து உள்ளேன். இந்த மனு சமந்தமாக மேற்படி விசாரணைக்கான வாய்தா எதிர் வரும் 11-08-2025ம் தேதி அன்று இராமநாதபுரம் வருவாய் கோட்டாச்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் அறிவிப்பு வெளியான 15 தினங்களுக்குள் காலை 10மணிக்கு மேற்படி நடுவர் முன்பு ஆஜர் ஆகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம்.

**மனுதாரர்
ஞானம்**

**உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்/ வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், இராமநாதபுரம்.**

**ந.க.பிஎண்:அ7/11757/2024**

S.முருகேசன், த/பெ.சுப்பிரமணியன், No.6/8/8, நெடுஞ்செழியன் தெரு, V.கரிசல் குளம், மதுரை-18.

மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி முகவரியில் வசிக்கும் மனுதாரராகிய நான் எனது தாயார் நாகலெட்சுமி அவர்கள் கடந்த 13.05.2014 ஆம் தேதியன்று காளிகோவில் தெரு, 4/2419, தங்கச்சிமடம் கிராமத்தில் உள்ள எங்கள் வீட்டில் இறந்ததை அறியாமையின் காரணமாக பதிவு செய்ய தவறிவிட்டேன். மேற்படி விசாரணைக்கான வாய்தா எதிர் வரும் 11.08.2025 தேதியன்று இராமநாதபுரம் சார் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற உள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் அறிவிப்பு வெளியான 15 தினங்களுக்குள் காலை 10.00 மணிக்கு மேற்படி நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக்கொள்ளலாம்.

**மனுதாரர் S.முருகேசன்,
த/பெ.சுப்பிர மணியன்,
No.6/8/8, நெடுஞ்செழியன் தெரு, V.கரிசல் குளம்,
மதுரை-18.
இராமநாதபுரம் - 623 534.**

**IN THE COURT OF THE COMMISSIONER OF FOR EMPLOYEE'S COMPENSATION.II
(Deputy Commissioner of Labour.II, Chennai 600 006.)
E.C.NO.100/2025**

Yammani Ashok Kumar
APPLICANT
Vs
1) J.Raghavendra
2) New India Assurance. Co. Ltd.,
OPPOSITE PARTIES
To
J.Raghavendra
C/o. J Siddeswara,
Door No. 36/226.20, Srinivasa Nagar, Chinna chowk, YSR Kadappa, Andhra Pradesh 516 002

Take notice the above said matter is posted on 11.08.2025 for your appearance before the DCL II, Deputy commissioner of labour, Chennai. Kindly make arrangements to appear on that day either by you or by your Counsel on that day at about 10.30 a.m otherwise the matter will be heard in your absence.

**Mr. P.M VIGNESH
COUNSEL FOR PETITIONER**

**உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்/ வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், இராமநாதபுரம்.**

**ந.க.பிஎண்:அ8/7686/2025**

பத்மநாதன், த/பெ.கார்மேகம், க.எண்.3/351, கல்கிற்று வலசை, நாகாச்சி, இராமநாதபுரம் – 623 534.

மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி முகவரியில் வசிக்கும் மனுதாரராகிய நான் எனது தாயார் கலைச்செல்வி அவர்கள் கடந்த 23.12.1992 ஆம் தேதி யன்று நாகாச்சி கிராமத்தில் இறந்ததை அன்றைய சூழ்நிலையில் நான் குழந்தை என்பதாலும் எனது தந்தை படிக்காதவர் என்பதாலும் அவரின் அறியாமையின் காரணமாக பதிவுசெய்யதவறிவிட்டேன். தற்போது எனது தாயார் பெயரில் சொத்துக்கள் பட்டா மற்றும் வரி மாற்றம் செய்ய மேற்படியார் இறப்பு சான்றிதழ் எனக்கு தேவைப்படுவதால், இது சம்மந்தமாக நான் மனு செய்ததில் சார்பதிவாளர், வெளிப்பட்டினம் சார்பதிவகம், இராமநாதபுரம் அவர்கள் எனது தாயாரின் இறப்பை பதிவு செய்து எனக்கு எனது தாயார் இறப்பு சான்றிதழ் வழங்கி உதவும்படி கேட்டுக்கொள்கிறேன். மேற்படி விசாரணைக்கான வாய்தா எதிர்வரும் 12.08.2025 தேதி யன்று இராமநாதபுரம் சார் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற உள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் அறிவிப்பு வெளியான 15 தினங் களுக்குள் காலை 10.00 மணிக்கு மேற்படி நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக்கொள்ளலாம்.

**மனுதாரர்
பத்மநாதன், த/பெ.கார்மேகம்,
க.எண்.3/351, கல்கிற்றுவலசை,
நாகாச்சி, இராமநாதபுரம் - 623 534.**

**COURT III BEFORE THE MOTOR ACCIDENT CLAIMS TRIBUNAL AT CHENNAI.
MCOP.No.6095 of 2018**

A.Yuvarani,
W/o.Ashok.
Petitioner.
Verses
1.Patta Dass,
S/o.Nadarajan & another
Respondents
To,
1.Patta Dass
S/o.Nadarajan,
No.14, First Street, Manicka Mudaliar Thottam, Muthailpet, Puducherry 605 001. [R.1]

Please take notice that the above case came an 25.07.2025 before the Hon'ble III Small Causes Court, Chennai has ordered notice to you and returnable by 28.08.2025 at 10.30 a.m. for your appearance. If you fail to appear before the Hon'ble III Small Causes Court, Chennai on 28.08.2025 at 10.30 a.m. the above case will be heard and decided in your absence.

**M.ANBALAGAN
Counsel for Petitioner.**

**In the Court of VI Judge Court of Small Causes at Chennai
M.A.C.T.O.P.No.411 of 2025**

Gnanasekar Govindaraj
Petitioner
Vs
1) Siva Sakthi Pattern Engineering Works
2) Bharathi AXA General Insurance Company Ltd.
Now merged with ICICI Lombard General Insurance Co. Ltd
Respondents
To
Siva Sakthi Pattern Engineering Works
No. 212, 6th street, Saraswathy Nagar, Tirumullaivoyal, Chennai 600 062

Take notice the above said matter is posted on 08.09.2025 for your appearance before the VI Judge, Court of Small Causes, Chennai. Kindly make arrangements to appear on that day either by you or by your Counsel on that day at about 10.30 a.m otherwise the matter will be heard in your absence.

**Mr.P.M VIGNESH
COUNSEL FOR PETITIONER**

**In the Court of IV Judge Court of Small Causes at Chennai
M.A.C.T.O.P.No.2891 of 2025**

A.Bilal
Petitioner
Vs
1) Shafiya Begum.A
2) Future Generali India Ins. Co. Ltd.,
Respondents
To
Shafiya Begum.A
No. 84, Mannarasami Kovil street, Puliyanthope, Perambur barracks, Chennai 600 012

Take notice the above said matter is posted on 25.08.2025 for your appearance before the IV Judge, Court of Small Causes, Chennai. Kindly make arrangements to appear on that day either by you or by your Counsel on that day at about 10.30 a.m otherwise the matter will be heard in your absence.

**Mr. P.M VIGNESH
COUNSEL FOR PETITIONER**

**In the Court of SPL II Court of Small Causes at Chennai
M.A.C.T.O.P.No.7117 of 2025**

M.Moorthy
Petitioner
Vs
1)D.Gajendriran
2) The New India Assurance Co. Ltd.,
Respondents
To
D.Gajendriran
No. 4/ 122, Pudhita Colony street,
Villupuram Taluka,
Attiyur Thirukkai,
Tamil Nadu 605 701

Take notice the above said matter is posted on 15.09.2025 for your appearance before the SPL II Judge, Court of Small Causes, Chennai. Kindly make arrangements to appear on that day either by you or by your Counsel on that day at about 10.30 a.m otherwise the matter will be heard in your absence.

**Mr. P.M VIGNESH
COUNSEL FOR PETITIONER**

**பலன் பெற்றோரின் பாராட்டுரைகள்!**


**பக்கவாதம்:** இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எனது வலது கையும், காலும், செயலிழந்துவிட்டது. நான் ஏழை என்பதால் அதிக செலவு செய்யமுடியவில்லை. பிறகு ஆறுமாதமாக எந்த வேலையும் செய்ய முடியவில்லை பிறகு டிவி யின் மூலம் ரப்பானி வைத்தியசாலா விளம்பரத்தைப் பார்த்தேன் மருந்து சாப்பிட்டு இப்பொழுது நன்றாக இருக்கிறேன். ஆர்.ஜெயராமன், புதுவாயல், பொன்னேரி வட்டம்.


**முடக்குவாதம்:** எனக்கு 6,7 வருடங்களாக உடல் முழுவதும் எல்லா மூட்டுகளிலும் வலியும், வேதனையும் இருந்தது. தோள், கழுத்து, முதுகு, இடுப்பு, கால் என்று எல்லா இடங்களிலும் வலி இருந்தது. இதன் காரணமாக வீட்டு வேலையைக்கூட என்னால் செய்ய முடியாது. பல மருத்துவர்களிடம் மருந்து சாப்பிட்டும் வலி நின்றபாடில்லை. பிறகு டிவியின் மூலம் ரப்பானி வைத்தியசாலாவில் மருந்து சாப்பிட்டேன். இப்போழுது நன்றாக இருக்கிறேன். ஆர். இந்திரா, வடபழனி


**ஆஸ்துமா:** நான் 13 ஆண்டுகளாக ஆஸ்துமா நோயினால் மூச்சுவிட முடியாமல் அவதிப்பட்டேன். இரவு தூங்கவும் முடியாது நடக்கவும் முடியாது. ஆங்கில மருந்தும் வேலை செய்யவில்லை. பிறகு டிவியின் மூலம் விளம்பரத்தை பார்த்தேன் ரப்பானி வைத்தியசாலாவில் மருந்து சாப்பிட்டு இப்பொது நீண்ட தூரம் நடக்கிறேன். ஐஸ் மோர் குடிக்கிறேன். சாந்தி சார்லஸ், கமலம் தெரு, புது அகரம் சென்னை –99


**சோரியாசிஸ்:** எனக்கு 14 ஆண்டுகளாக தலையில் பொடுகு இருந்தது. உடம்பில் மீன் செதில்போல் இருந்தது. எப்பொழுதும் உடம்பெல்லாம் அரிப்பு, நமச்சல் இருக்கும் எங்கேயும் செல்லமுடியமால் அதிகமாக கஷ்டபட்டேன். பிறகு டிவியின் மூலம் ரப்பானி வைத்தியசாலா விளம்பரத்தைப் பார்த்தேன் மருந்து சாப்பிட்டேன். இப்பொழுது நன்றாக இருக்கிறேன். டி.சிபு குமார், பண்ருட்டி.


**இடுப்பு வலி:** எனக்கு 2,3 வருடங்களாக இடுப்பு வலியால் உட்காரவோ நிற்கவோ முடியாது, பெரிய பெரிய மருத்துவமனை சென்று பார்த்தேன். எந்த பலனும் இல்லை பிறகு ஆப்ரேஷன் செய்யக் சொன்னார்கள் நான் பயந்து போய் விட்டேன் பிறகு புத்தகத்தின் மூலம் டிவியின் மூலம் விளம்பரத்தை பார்த்தேன். ரப்பானி வைத்தியசாலாவில் மருந்து சாப்பிட்டேன் இப்பொழுது விவாசயம் வேலைகள் எல்லாம் நன்றாக செய்கிறேன். சிவமணி, கரிவேடு கிராமம், ஆற்காடு வட்டம்.

**பக்கவிளைவுகள், பத்தியம் ஏதும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.**


டாக்டர் ஹக்கீம் S.A. சையத்சத்தார்
**ரப்பானி வைத்யசாலா**
Old No.65, New.139, டாக்டர் பெசன்ட் ரோடு,
(மீசாகிப்பேட்டை மார்க்கெட் அருகில்) சென்னை - 14
044-28476969/28470874

**விஜய் சூப்பர் டிவியில்** திங்கள் முதல் ஞாயிற்றுக்கிழமை வரை காலை 8.00 மணி முதல் 8.30 மணி.
**கலைஞர் செய்தியில்** திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9.30 முதல் 10 மணி வரை

**டாக்டர் சையத் சத்தாரின் பேட்டியை காணத்தவறாதீர்கள்.**
rabbani vaidya sala www.com

தினமும் மாலையில் ஆங்கிலத்தில் செய்திகளை படிக்க
EVENING TAMIL NADU
www.eveningtamilnadu.com
E-mail: eveningtamilnadu@gmail.com
FB: eveningtamilnadu

**மாலை தமிழகம்**
செய்தி பிரிவு தொடர்புக்கு
செல்: 7358244058,
9176415801, 9444059392
newsmataeditor@gmail.com


**மாலை தமிழகம்**
Admin Office:
No.G 8, Phase 1, Anubhav SSR
Pankajam enclave, No.24,
Arunachalam Road, Saligramam,
Chennai - 600 093
Ph: 9840094267- 9444052303
Email: maalaitamizhagam@gmail.com



காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் ஒன்றியம் பரணிபுத்தூர் ஊராட்சி தனியார் மண்டபத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாமை, சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடங்கி வைத்து, உடனடி தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு சான்றிதழ்கள் வழங்கினார். உடன், ஆட்சியர் கலைச்செல்வி மோகன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை ஆ.மனோகரன், கூட்டுறவுத் துறை இணை பதிவாளர் ஜெயஸ்ரீ, ஸ்ரீபெரும்புதூர் சார் ஆட்சியர் மிருணாளினி உள்ளனர்.



காஞ்சிபுரம் மாவட்டம் மாங்காடு நகராட்சியில் நடந்த, 'உங்களிடம் ஸ்டாலின்' முகாமில், பொதுமக்களிடம் நகராட்சி தலைவர் சுமதி முருகன், துணைத்தலைவர் ஜபருல்லா ஆகியோர் மனுக்கள் பெற்று, உடனடி தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு சான்றிதழ்கள் வழங்கினர். இதில், நகராட்சி ஆணையர் மற்றும் வார்டு உறுப்பினர் சாரதி உட்பட பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், சுதந்திர தின விழா முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்து துறை அலுவலர்கள் பங்கேற்ற ஆலோசனை கூட்டம் ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான் தலைமையில் நடந்தது. இதில், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் யோகஜோதி, தனித்துணை ஆட்சியர் முருகன், வருவாய் கோட்டாட்சியர் முருகேசன் உட்பட அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை தனியார் பள்ளியில், நாராயணன் ஜுவல்லரி, 19ம் ஆண்டு கண் பரிசோதனை முகாமை புதுச்சேரி அரவிந்த் கண் மருத்துமனை, மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கத்துடன் இணைந்து நடத்தியது. இதில், மக்கள் நீதி மய்யம் மாவட்ட செயலாளர் ரவிச்சந்திரன், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் பாஸ்கர், புதுச்சேரி அரவிந்த் கண் மருத்துவமனை ஒருங்கிணைப்பாளர் பரமசிவம் கலந்து கொண்டனர்.



கடந்த 2008ம் ஆண்டு ராஷ்டிரிய உலமா கவுன்சிலின் தமிழ்நாடு கிளை தொடங்கப்பட்டுள்ளதாகவும், மாநிலத்தலைவராக அக்ரம்கான் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக கவுன்சிலின் தேசிய பொதுச்செயலாளர் தல்ஹாரஷாதி சென்னை பத்திரிகையாளர் மன்றத்தில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். தேசிய செயலாளர் இஸ்மாயில், நிர்வாகிகள் ஷெரீப், நசீம், ரஹ்மான்கான் ஆகியோர் அருகில் உள்ளனர்.

## சோழமண்டல லயன்ஸ் சங்கம் துவக்க விழா



**திண்டிவனம், ஜூலை 30-**

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் உள்ள ஆரியாஸ் ஹோட்டலில் புதிய திண்டிவனம் சோழ மண்டல லயன்ஸ் சங்கம் துவக்க விழா, புதிய பொறுப்பாளர்கள் பணி ஏற்பு விழா, சேவை திட்டங்கள் துவக்க விழா ஆகிய முப்பெரும் விழா விருத்தாசலம் டெம்பிள் சிட்டி லயன்ஸ் சங்கத் தலைவர் குமாரசுவாமி தலைமையில் நடைபெற்றது.

செயலாளர் செல்வகுமார் அனைவரையும் வரவேற்றார். இதில் சாசன தலைவராக அன்னை சந்தானம், சாசன செயலாளர் நவநீதன், சாசன பொருளாளர் அஜய்குமார் ஆகியோருக்கு பதவி ஏற்பு விழா மாவட்ட ஆளுநர் ராஜா சுப்பிரமணியம், மாவட்டம் முதல் துணை ஆளுநர் சாலை கனகதாரன், மாவட்ட இரண்டாம் நிலை ஆளுநர் கமல் கிஷோர் ஜெயின், முன்னாள் மாவட்ட ஆளுநர்கள் ராஜன், தணிகாசலம், சரவணன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கி பதவி ஏற்பு மற்றும் சேவை திட்டங்களை துவக்கி வைத்தனர்.

## மானிய விலையில் மக்காச்சோளம்; விவசாயிகளுக்கு வேளாண் துறை அழைப்பு

**சேலம், ஜூலை 30-**

ஆத்தூர் வட்டார விவசாயிகள் மானிய விலையில் மக்காச்சோளம் பெற்றுக்கொள்ள, வேளாண்மை உதவி இயக்குனர் எம்.சம்பத்குமார் அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில், விவசாயத்தில், குறுகிய காலத்தில் நிறைவான மகசூலுடன் கணிசமான லாபம் ஈட்டக்கூடிய மக்காச்சோள சாகுபடி முக்கியமான பயிராகும். மக்காச்சோளப் பயிர் ஆத்தூர் வட்டாரத்தில் பரவலாக சாகுபடி செய்யப்பட்டு வரும் பயிராகவும், குறுகிய காலப்பயிர் என்பதால் பாசனம் குறைவாக இருக்கும் வயல்களுக்கு ஏற்ற பயிராகவும் இருக்கிறது.

தமிழக அரசு, வேளாண்மைத்துறை மூலம் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் மக்காச்சோளம் செயல் விளக்கத்திடல் அமைக்கும் விவசாயிகளுக்கு மானிய விலையில் வீரிய ஒட்டுரக மக்காச்சோள விதைகள், உயிர் உரங்கள், மண்வள மேம்பாட்டுக்கான இயற்கை இடுபொருட்கள், நானே யூரியா போன்ற வற்றை அளிக்கிறது.

ஆத்தூர் வட்டார வேளாண்மை விரிவாக்க மைய கிடங்குகளில் பொதுப்பிரிவு விவசாயிகளுக்கு 50 ஹெக்டேருக்கும் ஆதிதிராவிடர் பிரிவு விவசாயிகளுக்கு 5 ஹெக்டேருக்கும் இந்த மானிய விலை மக்காச்சோள சாகுபடிக்கு தேவையான இடுபொருட்கள் உடனடியாக வழங்கப்பட தயார் நிலையில் உள்ளன. இந்த வாய்ப்பை பயன்படுத்தி மக்காச்சோளம் சாகுபடி செய்ய விரும்பும் ஆத்தூர் வட்டார விவசாயிகள், தென்னங்குடி பாளையத்தில் அமைந்துள்ள வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தை கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

எனவே, மேற்கண்ட விதைகள் தேவைப்படும் விவசாயிகள், தங்களின் நில உடைமை சான்று, சிட்டா மற்றும் ஆதார் அட்டை நகல் கொண்டு வந்து தங்கள் சாகுபடிக்கு தேவையான விதையை மானிய விலையில் வேளாண் விரிவாக்க அலுவலகத்தை நேரில் அணுகி பெற்றுக்கொள்ளலாம் என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஸ்ரீதேவி நவசக்தி கடும்பாடி அம்மன் கோவிலில் ஆடிமாத தீ மிதி திருவிழா



**மாதவரம், ஜூலை 30-**

சென்னை பொன்னியம்மன் மேடு பட்டேல் தெருவில் அருள்பாலித்து வரும் ஸ்ரீதேவி நவசக்தி கடும்பாடி அம்மன் கோவிலில், ஆடி மாதம் ஆண்டு தீமிதி திருவிழா, கோவில் தர்மகர்த்தா சொக்கலிங்கம் நாயக்கர் - கிருஷ்ணவேணி அம்மாள் - சாந்தி அம்மாள் மற்றும் கோவில் நிர்வாகம் சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க., இளைஞரணி துணை அமைப்பாளர் சி.எஸ்.எஸ்.டி.சீனிவாசன் - தேவி ஆகியோர் ஏற்பாட்டில் விமரிசையாக நடைபெற்றது.

கணபதி ஹோமத்துடன் கோபூஜை, வாடைப்பொங்கல் வைத்தல், சக்திகரகம் எடுத்தல், அக்னி கப்பறை எடுத்தல், தாய்வீட்டு சீர்வரிசை எடுத்தல், அம்மனுக்கு காப்புக்கட்டுதல், கலசம், மஞ்சள் அபிஷேகம், சக்திகளுக்கு காப்புகட்டுதல், நவசக்தி ஹோமம், பால்குடம் எடுத்தல், சக்திகளுக்கு அலகு குத்துதல், அக்னி குண்டம் பூஜை, கூழ்வார்த்தல் போன்ற பல்வேறு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

பின்னர், காப்புக்கட்டிய பக்தர்கள் தீ குண்டத்தில் இறங்கி தங்களின் நேர்த்திக்கடனை பூர்த்தி செய்தனர்.

இத்திருவிழாவிற்கு கோவில் பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் கலந்து கொண்டு அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர். மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு கோவில் மற்றும் உபயதாரர்கள் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது.

முடிவில் அம்மன் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வாணவேடிக்கையுடன் திருவீதி உலா நடைபெற்றது.

## கள்ளக்குறிச்சியில் நெடுஞ்சாலைத்துறை சாலை பணியாளர் சங்கம் ஆர்ப்பாட்டம்



**கள்ளக்குறிச்சி, ஜூலை 30-**

கள்ளக்குறிச்சி தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலைப்பணியாளர் சங்கத்தின் சார்பாக, பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, கபிபந்தத்தை கையிலேந்தி, தர்ணா போராட்டம், கள்ளக்குறிச்சி நெடுஞ்சாலைத்துறை கோட்டப் பொறியாளர் அலுவலகம் முன்பாக நடைபெற்றது. வட்ட தலைவர் செல்லதுரை மற்றும் வட்ட செயலாளர் ஜேம்ஸ் ஆகியோர் தலைமை தாங்கினர். மாவட்ட துணைத்தலைவர்கள் மாரிமுத்து, ஜோதி, கிருஷ்ணன், தண்டபாணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநில துணைத்தலைவர் முத்து துவக்கவுரை ஆற்றினார். மாவட்ட தலைவர் ரவி சிறப்புரை ஆற்றினார். மாவட்ட செயலாளர் சாமி துரை மற்றும் மாநில துணைப்பொதுச் செயலாளர் மகாலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு விளக்கவுரை ஆற்றினர்.

இதில், சாலைப்பணியாளர்களின் 41 மாத பணி நீக்க காலத்தை சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவுப்படி பணிக் காலமாக முறை படுத்த வேண்டும்; தமிழக அரசு மீண்டும் மேல்முறையீடு செய்யக் கூடாது; உயர்நீதிமன்ற ஆணையை உடனே தமிழக அரசு அமல்படுத்த வேண்டும்; கருணை பணி நியமனம் வழங்க வேண்டும்; மாநில நெடுஞ்சாலை ஆணையத்தை தமிழக அரசு உடனே கலைக்க வேண்டும்; தனியார் மயப்படுத்துதலை அரசு கைவிட வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

இதில், மாநில நிர்வாககுழுவை சேர்ந்த குமாரதேவன், கொளஞ்சி வேல் மற்றும் முக்கிய நிர்வாகிகள் செந்தில் முருகன், விஜயராணி, வேளாங்கண்ணி, விஸ்வநாதன், காமராஜ் மற்றும் சங்க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். மாவட்ட பொருளாளர் சுந்தரம் நன்றி கூறினார்.

## விஸ்வகர்மா தர்ம பரிபாலன சங்க மகாசபை கூட்டம்



**தூத்துக்குடி, ஜூலை 30-**

தூத்துக்குடியில் விஸ்வகர்மா தர்ம பரிபாலன சங்க மகாசபை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் 10, 12ம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

தூத்துக்குடியில் விஸ்வகர்மதர்ம பரிபாலனசங்கத்தின் மகாசபை கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு சங்கத் தலைவர் சண்முகசுந்தரம் தலைமை வகித்தார். செயலாளர் சசிகுமார் ஆண்டு அறிக்கை வாசித்தார். கூட்டத்தில், பால விநாயகர் கோவில் தெருவில் இருக்கும் சங்கத்திற்கு பாத்தியப்பட்ட வணிக வளாகத்தில் மேல்மாடி கட்டுவது சம்பந்தமாக ஆலோசித்து ஒப்புதல் பெறப்பட்டது. தொடர்ந்து சங்கத்தின் புதிய பொருளாளராக கார்த்தீசன், உதவி தலைவராக வெங்கடேசனும் தேர்வு செய்யப்பட்டனர்.

மாலையில் நடந்த நிகழ்ச்சியில், கடந்த கல்வியாண்டில் 10 மற்றும் 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிகமதிப்பெண் பெற்ற மாணவ, மாணவியருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும், தாய்லாந்தில் நடைபெற்ற சர்வதேச ஸ்ட்ரென்த் லிஃப்ட் சாம்பியன்ஷிப் போட்டியில் தங்க பதக்கங்கள் வென்ற மாணவி ப்ரீத்தி சிவபிச்சம்மாளுக்கு பரிசு வழங்கி பாராட்டு தெரிவிக்கப்பட்டது. முடிவில், உதவி செயலாளர் ராஜகோபால் நன்றி கூறினார்.



சென்னை மதுரவாயல் வடக்கு பகுதி, 147வது வட்டத்தில் உள்ள அரசு பள்ளியில் தமிழக அரசு சார்பாக கலைஞர் காப்பீட்டு திட்ட முகாமை எம்.எல்.ஏ., காரம்பாக்கம் கணபதி துவக்கி வைத்து, பயனாளிகளிடம் இருந்து மனுக்களை பெற்றுக் கொண்டார். உடன், 11வது மண்டல குழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன், மாமன்ற உறுப்பினர் ரமணி மாதவன், வட்ட செயலாளர் எஸ்.பி.மாதவன், கிராம நிர்வாக அதிகாரி நாராயணமூர்த்தி மற்றும் பிருந்தாவனம் முருகன், அரசு ஊழியர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## கும்பகோணம் மகாமகக்குளத்தில் ஆடிப்பூரம் விழா ஐந்து அம்மன்கள் எழுந்தருளி தீர்த்தவாரி உற்சவம்



**கும்பகோணம், ஜூலை 30-**

கும்பகோணம் மகாமகக்குளத்தில் ஆடிப்பூரத்தை முன்னிட்டு, ஐந்து கோவில் அம்மன் சுவாமிகள் எழுந்தருளி தீர்த்தவாரி உற்சவம் நடந்தது. ஆதிகும்பேஸ்வரர் கோவிலில் மகாகும்பாபிஷேகத்துக்கு பாலாலயம் நடந்துள்ளதால் ஆடிப்பூர தீர்த்தவாரிக்கு மகா மகக்குளத்துக்கு வரவில்லை. மற்ற கோவில்களான நாகேஸ்வரர் கோவில் பெரிய நாயகி, காசி விஸ்வநாதர் கோவில் காசி விசாலாட்சி, சோமேஸ்வரர் கோவில் சோமசுந்தரி, அபிமுகேஸ்வரர் கோவில் அமிர்தவல்லி மற்றும் சாமுண்டீஸ்வரி அம்மன் கோவில்களில் இருந்து அம்பாள்கள் சிறப்பு மலர் அலங்காரத்தில் புறப்பட்டு முக்கிய வீதிகள் வழியாக மகாமகக் குளத்தின் மேல்கரைக்கு எழுந்தருளினர். தொடர்ந்து, மங்கள வாத்தியங்களுடன் அஸ்திர தேவர்களுக்கு பால், மஞ்சள், தேன், திரவியப் பொடி, சந்தனம் உள்ளிட்ட நறுமணப்பொருட்களால் மகாஅபிஷேகம் செய்யப்பட்டு, தீபாராதனையுடன் மகாமகக்குளத்தில் தீர்த்தவாரி உற்சவம் நடந்தது.

இதில், ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு மகாமகக்குளத்தில் புனித நீராடி ஆடிப்பூர அம்பாள்களை வழிபட்டனர்.

## செஞ்சி மாரியம்மன் கோவிலில் பூ பல்லக்கு திருவிழா



**செஞ்சி, ஜூலை 30 -**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி மலர் தொடு வியாபாரிகள் சார்பில், செஞ்சி கிருஷ்ணாபுரம் மாரியம்மனுக்கு 37ம் ஆண்டு ஆடிப்பூரத்தை முன்னிட்டு பூ பல்லக்கு பெருவிழா நேற்று (28ம் தேதி) இரவு நடைபெற்றது.

இதை முன்னிட்டு நேற்று காலை 6:00 மணிக்கு மூலவருக்கு சிறப்பு அபிஷேகமும் தீபாராதனையும் நடைபெற்றது. தொடர்ந்து 9:00 மணிக்கு செஞ்சி அங்காளம்மன் கோவிலில் இருந்து அக்னி சட்டி ஊர்வலமும், 10:00 மணிக்கு அங்காளம்மன் கோவிலில் இருந்து 108 பால்குடம் ஊர்வலம் நடந்தது. தொடர்ந்து அம்மனுக்கு பால் அபிகேஷகம் முடிந்து, 1:00 மணிக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. மாலை 6:00 மணிக்கு திருவிளக்கு பூஜை நடைபெற்றது. இரவு 10:00 மணிக்கு விநாயகர், மாரியம்மன், முருகருக்கு பல வித மலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு பூப்பல்லக்கு ரதத்தில் எழுந்தருளினர். தொடர்ந்து சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு பூப்பல்லக்கு வீதி உலா நடைபெற்றது. இதில், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள் கார்த்திக், அஞ்சலை நெடுஞ்செழியன், பொன்னம்பலம், இந்து சமய அறநிலையத்துறை அறங்காவலர் சரவணன் உள்ளிட்ட ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். விழாவுக்கான ஏற்பாடுகளை செஞ்சி மலர் தொடு வியாபாரிகள் செய்திருந்தனர்.



நீலகிரி மாவட்டம் குன்னூர் மவுண்ட் ரோட்டில் உள்ள சி.டி.என்., நிர்வாக அலுவலகத்தில் மாவட்ட தி.மு.க., பொறுப்பாளர் கே.எம்.ராஜு, தி.மு.க., நிர்வாகிகளை சந்தித்து உரையாடினார். உடன், முன்னாள் நீலகிரி மாவட்ட சிறுபான்மை பிரிவின் துணை அமைப்பாளர் சி.டி.என்.ஃபாருக், பொறியாளர் அணி துணை அமைப்பாளர் சந்திப்பு மற்றும் கோவர்தன், ஜிஜூ (எ) சுரேஷ், அஜய் சேகர் மற்றும் பலர் உள்ளனர்.


**ஸ்டேன்பேக்ஸ் (இந்தியா) லிமிடெட்**

பதிவு அலுவலகம்: எஸ். கே. என்க்ளேவ், புதிய எண் 4, (பழைய எண் 47) நௌரோஜி சாலை, சேத்துப்பட்டு, சென்னை - 600 031

CIN - L36991TN1991PLC021888, Website: www.stanpacks.in

Email: info@blissgroup.com/cs-sl@blissgroup.com Tel:91-044-43851353, 91-44-35007024/25

**30.06.2025 வரை முடிவடைந்த காலாண்டு / முழு ஆண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்**

(ரூ. லட்சத்தில்)

| வ. எண் | விவரங்கள் | முடிவடைந்த 3 மாதங்கள் 30.06.2025 | முடிவடைந்த மாதங்கள் 31.03.2025 | முடிவடைந்த 3 மாதங்கள் 30.06.2024 |
|---|---|---|---|---|
| | | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்தது | தணிக்கை செய்யப்படாதது |
| 1 | மொத்த செயல்பாடுகள் மூலம் வருமானம் | 772.94 | 2939.08 | 759.24 |
| 2 | இக்காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரிக்கு முன் சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு முன்) | 2.51 | 21.34 | 9.42 |
| 3 | இக்காலத்திற்கான வரிக்கு முன் நிகர லாபம் /(நஷ்டம்) (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்) | 2.51 | 21.34 | 9.42 |
| 4 | இக்காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம் / (நஷ்டம்) (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்) | 2.51 | 11.58 | 9.42 |
| 5 | இக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம்(இக்காலத்திற்கான வருமானம் உள்ளடக்கிய லாபம் /(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) | 2.51 | 11.04 | 9.42 |
| 6 | சமபங்கு முலதனம் (ஒவ்வொரு பங்கு ரூ.10/- ) | 609.60 | 609.60 | 609.60 |
| 7 | கையிருப்புகள் (முந்தைய ஆண்டு கணக்கில் மறுமதிப்பீடு கையிருப்புகள் நீங்கலாக) | | 90.39 | |
| 8 | பங்கு ஈட்டுதொகை (அசாதாரண இனங்களுக்கு முன்) (ஒவ்வொரு பங்கு ரூ.10/-) அடிப்படை & குறைமதிப்பு | 0.04 | 0.19 | 0.15 |

குறிப்பு : மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகள் வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33-வது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு / முழு ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் தேர்ந்தெடுக்கப்பட்டவைகள் ஆகும். காலாண்டு / முழு ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு படிவமும் கம்பெனியின் www.stanpacks.in என்ற இணையதளத்திலும், பங்கு வர்த்தக நிறுவனத்தின் URL - http://www.bseindia.com/stock-share-price/stanpacks-(india)-ltd/stanpack/530931/ and Company's website www.stanpacks.in என்ற இணையத்தளத்திலும் காணலாம்.

இடம் : சென்னை
நாள் : 29.07.2025

வாரியத்தின் சார்பாக
G.V.கோபிநாத்
நிர்வாக இயக்குநர்

# தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி நிகர லாபம் ரூ.305 கோடியாக உயர்வு: நிர்வாக இயக்குனர் தகவல்!

**தூத்துக்குடி, ஜூலை 30-**

தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியின் நிகர லாபம் 2025-2026ம் நிதியாண்டின் முதலாம் காலாண்டில் 6.27 சதவீதம் அதிகரித்து ரூ.287 கோடியில் இருந்து ரூ.305 கோடியாக உயர்ந்துள்ளது.

தூத்துக்குடியை தலைமையிடமாக கொண்டு இயங்கி வரும் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியானது 1921ம் ஆண்டு துவங்கப்பட்டு, சிறப்பாக செயல்பட்டு வரும் பாரம்பரியமிக்க தனியார் துறை வங்கியாகும். வங்கியானது தனது வரலாற்றில் தொடர்ந்து 103 வருடங்களாக லாபம் ஈட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

வங்கியானது 585 கிளைகள் மற்றும் 12 மண்டல அலுவலகங்கள் ஆகியவற்றின் மூலம் நாட்டின் 17 மாநிலங்கள், 4 யூனியன் பிரதேசங்களில் தனது விரிவாக்கத்தை ஏற்படுத்தி, ஏறத்தாழ 5.3 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றி வருகிறது.



இந்த நிலையில், தூத்துக்குடியில் நடைபெற்ற இயக்குனர் குழு கூட்டத்தில், 2025-26 முதலாம் காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் இறுதி செய்யப்பட்டது. வங்கியின் நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி சலீ எஸ்.நாயர் தணிக்கை செய்யப்படாத முதலாம் காலாண்டிற்கான நிதி நிலை அறிக்கையை வெளியிட்டார். அப்போது அவர் கூறுகையில், ''2025-2026ம் நிதியாண்டின் முதல் காலாண்டில் வங்கி தனது மொத்த வணிகத்தில் 9.86 சதவீதம் வளர்ச்சியடைந்து, ரூ.98,923 கோடியை எட்டியுள்ளது. வைப்புத்தொகை ரூ.53,803 கோடியாக உயர்ந்துள்ளது. கடன்களின் மொத்த தொகை 10.44 சதவீதம் வளர்ச்சி பெற்று ரூ.45,120 கோடியாக உள்ளது.

வங்கியின் நிகர மதிப்பு ரூ.9,328 கோடியாக உயர்ந்துள்ளது. முந்தைய ஆண்டின் முதல் காலாண்டில் இது ரூ.8,244 கோடியாக இருந்தது. வங்கி நிகர லாபம் ரூ.305 கோடியாக உள்ளது. முந்தைய ஆண்டில் இதே முதல் காலாண்டில் நிகர லாபம் ரூ.287 கோடியாக இருந்தது. நிகர வட்டி வருமானம் ரூ.567 கோடியில் இருந்து, ரூ.580 கோடியாக உயர்ந்துள்ளது. வங்கியின் மொத்த வாராக் கடன் 1.44 சதவீதத்தில் இருந்து 1.22 சதவீதமாகவும், நிகர வாராக்கடன் 0.65 சதவீதத்தில் இருந்து 0.33 சதவீதமாகவும் குறைந்துள்ளது.

தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி பங்குகளின் புத்தக மதிப்பு ரூ.520.63ல் இருந்து ரூ.589.09 ஆக அதிகரித்துள்ளது. நிதியாண்டின் முதல் காலாண்டில் வங்கியின் சில்லறை, விவசாயம், சிறு, குறு நடுத்தர நிறுவனங்களின் கடன் தொகை ரூ.37,614 கோடியில் இருந்து ரூ.42,100 கோடியாக உயர்ந்துள்ளது. அதே போல, முதல் காலாண்டில் ஏழு புதிய கிளைகள் தொடங்கப்பட்டுள்ளன. மனிதவள செயல்பாடுகளை தவிர்த்து, வங்கி முழுவதும் செலவு கட்டுப்பாட்டுக்காக ஒருங்கிணைக்கப்பட்ட விற்பனையாளர் மேலாண்மை முறைமை அறிமுகப் படுத்தப் பட்டுள்ளது. முழுமையாக டிஜிட்டல் மற்றும் செயல்முறை சார்ந்த வங்கியாக மாறும் நோக்கத்தில் வணிக செயல்முறை மேலாண்மையையும் வங்கி அறிமுகப் படுத்தியுள்ளது,'' என்றார்.

## தமிழ்நாடு மின் அமைப்பாளர்கள் மத்திய சங்க மாவட்ட கூட்டம்



**நெல்லை, ஜூலை 30-**

தமிழ்நாடு மின் அமைப்பாளர்கள் மத்திய சங்கம் திருநெல்வேலி மாவட்டம் ஜங்ஷன் கிளைச் சங்கத்தின் சார்பாக, திருநெல்வேலி மாவட்ட கூட்டம், ஜங்ஷன் பாரதி ஹோட்டல் மாடி ஹாலில் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஜங்ஷன் கிளை செயலாளர் பி.ராமசுப்பிரமணியன் மற்றும் துணைத்தலைவர் ஏ.சேவியர் ஜார்ஜ் ஆகியோர் தலைமை ஏற்றனர். நெல்லை மண்டல செயலாளர் சி.ஞான செல்வம், மாநில திட்டச் செயலாளர் எம்.பாக்கியம், மாவட்டத்தலைவர் எம்.ஆவூரான் என்ற கர்ணன், மாவட்ட துணைத்தலைவர் டாக்டர் கே.சித்திரை ஆகியோர் தலைமையில் மாவட்டச்செயலாளர் எம்.முத்து மாரியப்பன் நடத்தி வைத்தார். கூட்டத்தில் அனைத்து கிளைச்சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது. கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக, பாரதி ஹோட்டல், பாரத் மெடிக்கல்ஸ் உரிமையாளர் எஸ்.பாரத் கலந்து கொண்டு சிறப்பித்தார். திருநெல்வேலி மாவட்ட பொருளாளர் என். தியாகராஜன் நன்றி கூறினார்.

# செ.அகரம் கோவில் விழா; கொதிக்கும் நெய்யில் பலகாரங்களை கையால் எடுத்து சிறப்பு பூஜை

**திருவண்ணாமலை, ஜூலை 30-**

திருவண்ணாமலை அடுத்த செ.அகரம் ஓட்டேரி காட்டுப் பகுதியில் செ.அகரம், பண்டிதப்பட்டு, சின்னகோலாபாடி ஆகிய கிராமங்களின் குலதெய்வமான அய்யனாரப்பன் கோவிலில் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் வழிபாடு கடந்த ஞாயிறு அன்று நடந்தது. அப்போது கிராம மக்கள் பொங்கல் வைத்து ஆடு, கோழி, பன்றிகளை பலி கொடுத்து குலதெய்வத்தை வணங்கினர். இதில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டனர்.



இந்த விழாவின் தொடர்ச்சியாக 2வது நாள் செ.அகரம் கிராமத்தில் உள்ள ஸ்ரீசந்தியம்மன் கோவிலில் அபிஷேக ஆராதனை விழா நேற்று (29ம் தேதி) நடத்தப்பட்டது. இந்த விழாவில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் கூடினர். மொட்டை அடித்து காது குத்தி பொங்கல் வைத்து சந்தியம்மனை வழிபட்டனர். பகல் 1.30 மணியளவில் கோலாபாடியை சேர்ந்த ஆண்டாள்அம்மாள் என்ற மூதாட்டி கொதிக்கும் நெய்யில் வெந்து கொண்டிருந்த பலகாரங்களை கைகளால் எடுத்து பக்தர்களை பரவசப் படுத்தினார்.

இதில் செ.அகரம், பண்டிதப் பட்டு, பெரிய கோளாப்பாடி, சின்னகோளாபாடி, சின்னபாலியப் பட்டு, பெரும்பாக்கம், காவேரியாம் பூண்டி உள்ளிட்ட சுற்றுப்புற கிராமங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். இந்த விழாவுக்கான ஏற்பாடுகளை விழாக்குழுவைச் சேர்ந்த முன்னாள் எம்.எல்.ஏ., கே.மணிவர்மா, பண்டிதப்பட்டு முன்னாள் மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் எம். அய்யனார் மற்றும் விழாக்குழுவினர் செய்திருந்தனர்.

# அரிமா அமைச்சரவை புதிய நிர்வாகிகள் பதவியேற்பு

**சென்னை, ஜூலை 30-**

பன்னாட்டு அரிமா சங்கம் மாவட்டம் 3241-எப் சார்பில், 2025-2026ம் ஆண்டிற்கான புதிய அமைச்சரவை கேபினட் நிர்வாகிகள், துணை ஆளுநர்கள், மண்டல தலைவர்கள், வட்டார தலைவர்கள், மாவட்ட தலைவர்கள் பதவி ஏற்பு விழாவும், நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவும், பல்வேறு துறை சார்ந்த சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கும் விழாவும் வடபழனி கீரின் பார்க் ஓட்டலில் நடைபெற்றது.



இவ்விழாவில், நீதிபதி எஸ்.தமிழ்வாணன், டாக்டர் எம்.ஜி.ஆர்., மருத்துவ பல்கலைக் கழக துணைவேந்தர் மருத்துவர் கே.நாராயணசாமி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளையும், சாதனையாளர்களுக்கு விருதுகளையும் வழங்கி சிறப்பித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் பன்னாட்டு இயக்குனர் என்.எஸ். சங்கர் அனைவருக்கும் பதவிப்பிரமாணம் செய்து வைத்து பதவியேற்பு விழாவை சிறப்பாக நடத்தி வைத்தார். இவ்விழாவை, மாவட்ட ஆளுநர் அரிமா எம்.பிரவின்லால் தலைமையேற்று நடத்தி வைத்தார். முன்னதாக, மாநாட்டு நிர்வாகக் குழுத்தலைவர் மருத்துவர் ராம கிருஷ்ணன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

இந்த நிகழ்வில், முன்னாள் ஆளுநர்கள் டாக்டர் கோ.மணிலால், அனில்குமார், சுந்தரம், ராமமூர்த்தி, துணைநிலை ஆளுநர்கள் உமாதேவி அனில்குமார், வாகேஷ், மாற்றுத் திறனாளர் நலனிற்கான அரிமா மாவட்டத் தலைவர் அரிமா டாக்டர் ஆவின் கி.கோபிநாத், அமைச்சரவை செயலாளர் விஜய் ஆனந்த் மற்றும் அரிமா சங்க நிர்வாகிகள், ராஜேஷ்வரராவ், பால சுப்பிரமணியம் சிவகுமார், உதய குமார், ஜனார்த்தனன், சிந்தை வாசன், அரிமா மண்டலத்தலை வர்கள், வட்டாரத் தலைவர்கள், மாவட்டத் தலைவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிகழ்ச்சியின் இறுதியில், அரிமா மாவட்ட பொருளாளர் உதயம் பாலகிருஷ்ணன் நன்றி கூறினார். இந்த விழாவில், ஏழை, எளியோருக்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன.

# பரணி புத்தூர் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் முகாம்

**குன்றத்தூர், ஜூலை 30-**

குன்றத்தூர் ஒன்றியம் பரணிபுத்தூர் ஊராட்சி தனியார் மண்டபத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாமை, சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறு வனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் தொடங்கி வைத்து, உடனடி தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு சான்றி தழ்கள் வழங்கி, நாற்று நடும் மிஷினை பயனாளி ஒருவருக்கு வழங்கினார்.



அப்போது அவர் கூறுகையில், ''காஞ்சிபுரம் மாவட்டத்தில், 234 முகாம்கள் நடைபெற உள்ளன. தற்போது வரை, 31 முகாம்கள் நடத்தப் பட்டு, பொதுமக்களிடம் மனுக்கள் பெறப்பட்டுள்ளன. 45 நாட்களில் அனைத்து மனுக்களுக்கும் தீர்வு காணப்பட்டு உரிமைத் தொகை, சான்றிதழ்கள் வழங்கப்படும்,'' என்றார். இதில், ஆட்சியர் கலைச்செல்வி மோகன், மாவட்ட சேர்மன் ஆ.மனோகரன், ஒன்றிய சேர்மன் சரஸ்வதி மனோகரன், ஒன்றிய குழு துணை தலைவர் உமாமகேஸ்வரி வந்தேமாதரம், வட்டார வளர்ச்சி அலுவலர் வரதராஜன், பரணி புத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் கௌரி தாமோதரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடியில் உங்களுடன் ஸ்டாலின் முகாம்

**தூத்துக்குடி, ஜூலை 30-**

தூத்துக்குடியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமில் உடனடியாக தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கான ஆணையை அமைச்சர் கீதாஜீவன் வழங்கினார்.

தூத்துக்குடி மாநகராட்சி 37 மற்றும் 42வது வார்டுகளுக்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் சண்முகபுரம் பகுதியில் உள்ள சிவந்தி ஆதித்தனார் மெட்ரிக்பள்ளியில் நடைபெற்றது. முகாமில் 798 மகளிர் உரிமைத் தொகை விண்ணப்ப மனுக்கள், 180 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்ந்த மனுக்கள், 67 மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்ந்த மனுக்கள், 64 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்ந்த மனுக்கள், 55 எரிசக்தி துறை சார்ந்த மனுக்கள் உட்பட மொத்தம் 1,310 விண்ணப்ப மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டன.



சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க., செயலாளருமான கீதா ஜீவன் முகாமை பார்வையிட்டதுடன், மின்இணைப்பு பெயர் மாற்றம் குறித்து விண்ணப்ப மனு அளித்த பயனாளிக்கு உரிய ஆவணத்தை வழங்கினார்.

முகாமில், மாநகராட்சி உதவி ஆணையர் பாலமுருகன், தாசில்தார் முரளி தரன், சமூக பாதுகாப்பு திட்ட முருகேஸ்வரி உள்ளிட்ட அரசு அலுவலர்கள் மற்றும் மாநகர தி.மு.க., செயலாளர் ஆனந்தசேகரன், பொதுக்குழு உறுப்பினர் கோட்டுராஜா, மாநகராட்சி மண்டல தலைவர் அன்னலட்சுமி, மாமன்ற உறுப்பினர்கள் பாப்பாத்தி, பொன்னப்பன், சண்முகபுரம் பகுதி துணைச் செயலாளர் ஜெய்சிங், வட்டச் செயலாளர்கள் பொன்ராஜ், சுரேஷ் மகாராஜன், மாரீஸ்வரன், வட்டப் பிரதிநிதி சற்குணம், மாவட்ட மருத்துவர் அணி தலைவர் அருண் குமார், மாநகர இளைஞரணி அமைப்பாளர் அருண்சுந்தர், சண்முகபுரம் பகுதி இளைஞரணி அமைப்பாளர் சூர்யா, பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் கணேஷ், பெருமாள் கோவில் அறங்காவலர்குழு தலைவர் செந்தில்குமார் மற்றும் மணி, அல்பர்ட் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஆக., 4ம் தேதி அந்தியூர் வனத்துறை அலுவலகத்தில் குடியேறும் போராட்டம்: மீனவர் சங்கத்தினர் அறிவிப்பு

**அந்தியூர், ஜூலை 30-**

அந்தியூர் அருகே உள்ள வரட்டுப் பள்ளம் அணையில் பிடிக்கும் மீன்களை எங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என, வனத்துறையினர் 'டிமாண்ட்' விடுப்பதால் வரும் ஆக., 4ம் தேதி அந்தியூர் வனத்துறை அலுவலகத்தில் குடியேறும் போராட்டம் நடத்துவதாக மீனவர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.



ஈரோடு மாவட்டம் அந்தியூர் அருகேயுள்ள வரட்டுப்பள்ளம் அணையில் மீன் பிடிக்கும் உரிமத்தை, அந்தியூர் பெஸ்தவர் மீனவர் கூட்டுறவு சங்கம் பெற்றிருந்தது. இங்கு, ஜிலேபி, கட்லா, பொட்லா, ரோகு, மிருகால் ஆகிய மீன் வகைகளை பிடித்து, கூட்டுறவு சங்கத்தினர் விற்பனை செய்து வந்தனர்.

இதற்கான ஐந்தாண்டு குத்தகை காலம், கடந்த 22ம் தேதியோடு முடிவடைந்தது. மேலும், தந்தை பெரியார் வன சரணாலயமாக, அந்தியூர் வனசரகம் அறிவிக்கப்பட்டதால், அதனுள் அடங்கும் வரட்டுப்பள்ளம் அணையில் மீன் பிடிக்க, மீன் வளத்துறைக்கும், மீனவர்களுக்கும், மாவட்ட வனத்துறை தடை விதித்தது. இந்நிலையில், வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது எனவும், மீண்டும் மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும் எனவும், கடந்த திங்களன்று, மீனவர் சங்கத்தினர், மாவட்ட கலெக்டர் கந்தசாமியை நேரில் சந்தித்து மனு வழங்கினர். இது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதாக கலெக்டர் கூறினார். இப்பிரச்சினை குறித்து, நேற்று முன்தினம், அந்தியூர் வன சரக அலுவலகத்தில், ரேஞ்சர் முருகேசன் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடந்தது.

கூட்டத்தில், மீன்பிடிக்க அனுமதி வழங்கினால், மீன்களை வனத்துறையினருக்கே வழங்க வேண்டும் என்றும்; இல்லையென்றால் மீன் பிடிக்க அனுமதியில்லை என, வனத் துறை தெரிவித்ததாக கூறப்படுகிறது.

இதுகுறித்து, மீனவர் சங்கத்தினர் கூறுகையில், 'கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக, வரட்டுப்பள்ளம் அணையில் மீன் பிடித்து மீனவர் சங்கத்தினர் பிழைப்பு நடத்தி வருகிறோம். சரணாலயமாக அறிவித்ததால், மீன் பிடிக்க அனுமதியில்லை என வனத்துறை அறிவித்துள்ளது.

இதனால், எங்கள் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது. இரு நாட்களுக்கு முன், வனசரக அலுவகத்தில் நடந்த கூட்டத்தில், மீன் பிடிக்க அனுமதித்தால், அம்மீன்களை எங்களுக்கே கொடுக்க வேண்டும் எனவும்; நாங்களே விற்று, எங்கள் அக்கவுண்டில் பணத்தை செலுத்தி கொள்வோம் என்றும் வனத்துறையினர் தெரிவித்தனர்.

மேலும், மாதம் ஒரு நாள் மீன் பிடிக்கும் அனுமதியளித்து, அதற்கான கூலியை மட்டும் எங்களுக்கு வழங்குவதாகவும் வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். வனத்துறையினர் எங்களுக்கு எதிராக செயல்படுகின்றனர். புலிகள் காப்பகத்துக்குள் உள்ள பவானி சாகர், ஆனைமுடி, சோலையாறு, பில்லூர் அணை மீன்பிடிக்க அனுமதி வழங்கியதை போல, இங்கும் அனுமதி வழங்க வேண்டும். வரட்டுப்பள்ளம் அணையில் மீன் பிடிக்க அனுமதி கோரி, அடுத்த மாதம் ஆகஸ்ட் 4ம் தேதி, அந்தியூர் வனத் துறை அலுவலகத்தில் குடியேறும் போராட்டம் நடத்தவுள்ளோம்' என்றனர்.




## பணகுடி
## சிறப்புநிலை பேரூராட்சி
## திருநெல்வேலி மாவட்டம்



### திட்டப்பணிகள் விபரம்

| ஆண்டு | திட்டத்தின் பெயர் | எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 2022-23 | நபார்டு திட்டம் | 1 | 83.50 |
| | 15வது நிதிக்குழு மானியம் | 3 | 59.40 |
| | இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி | 1 | 12.50 |
| 2023-24 | 15வது நிதிக்குழு மானியம் | 7 | 129.40 |
| | அம்ரூட் 2.0 திட்டத்தின்கீழ் பூங்கா பணிகள் | 1 | 12.00 |
| 2024-25 | மாநில நிதி ஆணையம் நகர்புற சாலை மேம்பாட்டு நிதி | 2 | 67.00 |
| | மூலதன மானிய நிதி | 1 | 130.00 |
| | 15வது நிதிக்குழு மானியம் | 7 | 145.15 |
| | மொத்தம் | 23 | 638.95 |





## த.தனலெட்சுமி
தலைவர், பணகுடி சிறப்பு நிலை பேரூராட்சி

## வை.சகாய புஷ்பராஜ்
துணைத்தலைவர், பணகுடி சிறப்பு நிலை பேரூராட்சி

(ஓம்) திரு. மூ.சி.சுப்பிரமணியன்
செயல் அலுவலர், பணகுடி சிறப்புநிலை பேரூராட்சி
மற்றும் அனைத்து வார்டு உறுப்பினர்கள்

## மயிலம் மயிலி அம்மன் கோவிலில் வளையல் அணி விழா கோலாகலம்



திண்டிவனம், ஜூலை 30-

விழுப்புரம் மாவட்டம் மயிலம் தொகுதி கீழ்மயிலத்தில் பிரசித்தி பெற்ற மயிலி அம்மன் கோவில் அமைந்துள்ளது. இந்த கோவிலில், ஆடிப்பூரத்தை முன்னிட்டு, வளையல் அணி விழா நடந்தது. இதனை முன்னிட்டு கடந்த 28ம் தேதி அதிகாலை கோவில் நடை திறக்கப்பட்டு அம்மனுக்கு பால், தயிர், சந்தனம், பன்னீர், தேன், இளநீர், அபிஷேகம் நடைபெற்று அம்மனை சந்தன காப்பு அலங்காரம் மற்றும் வளையல்களால் அலங்கரிக்கப்பட்டு சிறப்பு தீபாராதனைகள் நடைபெற்றது. தொடர்ந்து திருமணமாகி பல வருடங்களாக குழந்தை பாக்கியம் இல்லாத பெண்களை அமர வைத்து சந்தனத்தால் நலங்கு வைத்து ஆரத்தி எடுத்து வளையல்களை அணிவித்து குழந்தை பாக்கியம் வேண்டி சிறப்பு வழிபாடு மேற்கொண்டனர். பிறகு வளையல் அணி நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைத்து பக்தர்களும் பலவகையான கலவை சாதம் அன்னதானமாக வழங்கப்பட்டது. இதில், மயிலம் மற்றும் சுற்றுவட்டார பகுதியில் இருந்து ஏராளமான பெண் பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

## ரூ.2.45 கோடியில் ஐந்து நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்; சென்னை துறைமுக ஆணையம் கையெழுத்து



சென்னை, ஜூலை 30-

சென்னை துறைமுக ஆணையம், ரூ.2.45 கோடி மதிப்பில், ஐந்து நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது.

முழுமையான மற்றும் உள்ள டக்கிய சமூக மேம்பாட்டிற்கான உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக, சென்னை துறைமுக ஆணையம், ஐந்து மதிப்பு மிக்க அமைப்பு களுடன் புரிந்துணர்வு ஒப்பந் தங்களில் கையெழுத்திட்டது. 2025-26ம் நிதியாண்டில் ரூ.2.45 கோடி மதிப்புள்ள அதன் பெரு நிறுவன சமூக பொறுப் புணர்வு (சி.எஸ்.ஆர்.,) முயற்சிகளின் கீழ், நேற்று (29ம் தேதி) இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது. கல்வி, சுகாதாரம், சமூக அதிகாரமளித்தல் மற்றும் உள்கட்டமைப்பு ஆதரவு ஆகிய துறைகளில் இந்தத் திட்டங்கள் பரவியுள்ளன.

அதன் படி, அரசுப் பள்ளிகளில் இருக்கைகள் வினியோகம் செய்ய TIPKAI நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

மேலும், பெண்களுக்கு தற்காப்பு, தேர்வு அழுத்த மேலாண்மை மற்றும் மாதவிடாய் சுகாதாரம் உள்ளிட்ட விழிப்புணர்வு திட்டங்களை மேற் கொள்ள பென் டிரஸ்ட் மற்றும் ஆட்டிசம் உள்ள குழந்தை களுக்கான பள்ளிக்கு செயல்பாட்டு ஆதரவுக்காக ஸ்வபோதினி அறக்கட்டளை யுடனும், கற்றல் சூழலை மேம் படுத்த விரிவுரை அரங்குகளில் குளிர்சாதன அறைகளை ஏற்படுத்த மெட்ராஸ் மருத்துவக் கல்லூரி யுடனும், தொழில் மற்றும் மதிப்பு அடிப்படையிலான பயிற்சி முயற்சிகளின் கீழ் பயிற்சி யாளர்கள் மற்றும் பயிற்சியாளர் களை தங்க வைக்க நான்கு அறைகள் கட்டுவதற்கு, ஸ்ரீராம கிருஷ்ணா மடத்துடனும் ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்டது.

இந்த கையெ ழுத்து நிகழ்வுக்கு, சென்னை துறைமுக ஆணையத்தின் தலை வரும் காமராஜர் துறைமுக நிறுவனத் தின் தலைவரு மான சுனில் பாலிவால் தலைமை தாங்கினார். சென்னை துறைமுக ஆணையத்தின் துணைத் தலைவர் எஸ்.விஸ்வ நாதன், காமராஜர் துறை முக நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் ஐரீன் சிந்தியா, தலைமை கண்காணிப்பு அதிகாரி முரளிகிருஷ்ணன், துறைத் தலை வர்கள் மற்றும் சென்னை துறைமுக ஆணையத்தின் பிற மூத்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## உப்பிலியபுரத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் எம்.எல்.ஏ., ஸ்டாலின் குமார் தொடங்கி வைத்தார்



துறையூர், ஜூலை 30-

துறையூர் சட்டசபை தொகுதிக்கு உட்பட்ட உப்பிலியபுரத்தில், 'உங்களுடன் ஸ்டாலின்' முகாமை, எம்.எல். ஏ., ஸ்டாலின் குமார் தொடங்கி வைத்தார்.

திருச்சி மாவட்டம் துறையூர் சட்டசபை தொகுதிக்குட்பட்ட உப்பிலிய புரத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது. முகாமை, எம்.எல்.ஏ., ஸ்டாலின் குமார் தொடங்கி வைத்து பொது மக்களின் கோரிக்கை மனுக்களை பெற்று துறை சார்ந்த அதிகாரிகளிடம் மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கூறினார்.

முகாமில், ஊரக வளர்ச்சித்துறை, வருவாய்த்துறை மற்றும் பேரிடர் துறை, கால்நடை பராமரிப்பு, மின் சாரத்துறை, காவல்துறை, மாற்றுத் திறனாளி நலத்துறை என 15 துறையை சேர்ந்த அதிகாரிகள் பங்கேற்றனர். முகாமில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு பல்வேறு கோரிக்கை மனுக்களை கொடுத்தனர். முகாமில் வெங்கடாசலபுரம், மாராடி, ஒக்கரை ஆகிய ஊராட்சிகளை சேர்ந்த பொதுமக்கள் தங்களது கோரிக்கைகளை சம்பந்தப்பட்ட துறை அதிகாரியிடம் வழங்கினர். இதில், உப்பிலியாபுரம் ஒன்றிய செயலாளர்கள் முத்துச்செல்வன், அசோகன், கொப்பம்பட்டி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் மனோகரன், வெங்கடாசலபுரம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் லதா, தனபால், ஊராட்சி செயலர்கள் அசோக்குமார், பிரகாஷ், பெருமாள், ராமச்சந்திரன், சின்னதுரை, மதன், விஜய், நடராஜ், சுந்தர்ராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## மாரியம்மன் கோவிலில் அ.தி.மு.க., அமைப்பு செயலாளர் என்.முருகுமாறன் சிறப்பு வழிபாடு



காட்டுமன்னார்கோவில், ஜூலை 30-

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் உடையார்குடியில், மாரியம்மன் கோவில் அமைந்துள்ளது. பிரசித்தி பெற்ற இந்த கோவிலின் ஆடி மாத விழா, ஆடி மாதம் 4ம் தேதி காப்பு கட்டுதலுடன் தொடங்கியது. தொடர்ந்து, கோவிலில் திருக்கல்யாணம், திருத்தேர் உற்சவம், செடல், காவடி என பல்வேறு விழாக்கள் தினமும் நடைபெற்று வந்தன.

இந்த நிலையில், கோவிலின் சிகர நிகழ்வான தீமிதி திருவிழா நடந்தது. முன்னதாக கோவில் முன்பு ஏற்படுத்தப்பட்டிருந்த தீக்குண்டத்தில், அ.தி.மு.க., பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி 2026ல் தமிழக முதல்வராக வேண்டி, அமைப்புச் செயலாளரும், முன்னாள் எம்.எல்.ஏ.,வுமான என்.முருகுமாறன் காப்பு கட்டி விரதம் இருந்து நேர்த்திக்கடன் செலுத்திட தீமிதித்து வழிபாடு செய்தார். மேலும் இந்த விழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்களும் தீ மிதித்து வழிபாடு செய்தனர்.



திருத்தணி முருகன் கோவில் அறங்காவலர் குழு உறுப்பினராக பொன் பாடி உஷா ரவி பொறுப்பேற்றதை முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளரும் எம்.எல்.ஏ.வுமான திருத்தணி சந்திரனை சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் நெடுஞ்சாலை ஒப்பந்ததாரர் ரவி மற்றும் குடும்பத்தினர் உள்ளனர்.



வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் கீழ் செயல்படும், ஈரோடு விற்பனை குழு நிதி 50 லட்சம் ரூபாயில், பர்கூர் மலையில் துணை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் செல்ல கான்கிரீட் சாலை அமைப்பதற்கான பணிகளை, பர்கூர் அருகேயுள்ள ஊசிமலையில், அந்தியூர் எம்.எல்.ஏ., வெங்கடாசலம், பூமி பூஜை செய்து துவக்கி வைத்தார். இதில், தி.மு.க., வடக்கு ஒன்றிய செயலாளர் ஆ.எ.ராமதாஸ், அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் ஞானசேகர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மாற்றுக்கட்சியினர் பா.ஜ.,வில் ஐக்கியம்



திண்டுக்கல், ஜூலை 30-

திண்டுக்கல் கிழக்கு ஒன்றியம் பாலகிருஷ்ணபுரம் ஊராட்சிக்கு உட்பட்ட ஜம்புளியம்பட்டியில் மாற்றுக் கட்சியில் இருந்து விலகி பா.ஜ., கட்சியில் சுமார் 100க்கும் மேற்பட்டோர் இணைந்தனர். இந்த நிகழ்ச்சிக்கு ஊடகப்பிரிவு மாவட்டத்தலைவர் செந்தில், இளைஞர் அணி மாவட்ட செயலாளர் சதீஷ்குமார், பா.ஜ., நிர்வாகி திருப்பதி ஆகியோர் தலைமை தாங்கினர். ஊர் கவுண்டர் வெங்கடாசலம், ஊர் முக்கியஸ்தர்கள் ரெங்கசாமி, சங்கர், ஜெகநாதன், மாரிமுத்து, செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினர்களாக திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தலைவர் டி.முத்துராமலிங்கம், முன்னாள் மாவட்ட தலைவர் மாநகராட்சி கவுன்சிலர் ஜி.தனபாலன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## சதுரங்கப்பட்டினத்தில் காமராஜர் பிறந்த நாள் விழா




கல்பாக்கம், ஜூலை 30-

செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றம் வட்டம் சதுரங்கப் பட்டினத்தில் கல்வி ஒளி நண்பர்கள் குழு சார்பில் கர்மவீரர் காமராஜர் பிறந்த நாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. தலைவர் பு.ரமேஸ் தலைமை தாங்கினார். செயலாளர் த.முனுசாமி மற்றும் நிர்வாகிகள் ந.சதீஸ், பெ.லோகநாதன், கா.கோபால், ச.மணிமாறன், து.பிரியா துரைராசு, ஆமின்தின், பாக்கிய லட்சுமி ரமேஸ், மா.ரவி, சங்கீதா டில்லிபாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் முன்னாள் முதல்வர் பெருந்தலைவர் காமராஜரின் வாழ்க்கை வரலாறு, சாதனைகள் குறித்து மாணவர்கள் பேசினர்.

இதில், மாணவர்களின் பேச் சாற்றலை வளர்க்கும் விதமாக கவிஞர் உதயா ஆதிமூலம் தலைமையில் பட்டிமன்றம் நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் அகவை முதிர்ந்த தமிழறிஞர் அகநம்பி கலந்து கொண்டு மாணவர்களை வாழ்த்தினார். நிகழ்ச்சியை ஆசிரியர் சம்பத் ஒருங்கிணைத்தார். இதில் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் நூல் பரிசாக வழங்கப்பட்டது.


சாலை விதிகளை மதிப்போம்!!




போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு
ஆணையரகம் - தமிழ்நாடு அரசு
வட்டார போக்குவரத்து அலுவலகம் - செங்கல்பட்டு





பாலக்கோடு
தேர்வுநிலை பேரூராட்சி
தருமபுரி மாவட்டம்



2022-2023, 2023-24ம் ஆண்டு பேரூராட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டப்பணிகள் விவரம்:

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் குடிநீர் விநியோக பணியினை மேற்கொள்ளுதல் | 465.00 |
| 2 | நமக்கு நாமே திட்டத்தின் கீழ் வார்டு எண்.11 அப்துல் கரீம் சாயபு தெரு மற்றும் அல்லா கோவில் தெருவில் சிமெண்ட் சாலையுடன் வடிகால் அமைத்தல் | 15.00 |
| 3 | இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் திட்டத்தின் கீழ் வார்டு எண்.4 பனாரஸ் தெரு வார்டு எண்.15 தக்காளி மார்க்கெட் மற்றும் வார்டு எண்.14 அருந்ததியர் தெருவில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 11.10 |
| 4 | பொது நிதி திட்டத்தின் கீழ் பேருந்து நிலையத்தில் வடக்கு புரத்தில் பழுதடைந்த வடிகால் புதுப்பித்தல் பணி | 10.00 |
| 5 | பொது நிதி திட்டத்தின் கீழ் பேருந்து நிலையம் பழுதடைந்த சாலை பழுது பார்த்தல் பணிக்கு | 15.00 |
| 6 | செஸ்பூல் டேங்கர் (Cesspool Tanker) கொள்முதல் செய்தல் பணி | 43.25 |
| 7 | 15-வது நிதி குழு மான்யத்தின் கீழ் பேருந்து நிலைய பொது கழிப்பிடம் பராமரிப்பு பணி செய்தல் | 5.00 |
| 8 | 15-வது நிதி குழு மான்யத்தின் கீழ் வளம்மீட்பு பூங்காவிற்கு டிப்பர் லாரி கொள்முதல் செய்தல் | 26.00 |
| 9 | கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் வாங்குதல் (Lithium) (BOV)-3 எண்ணிக்கை | 5.92 |
| 10 | பொது நிதியின் கீழ் நீரேற்றும் நிலையம் மற்றும் அலுவலக வளாகத்தில் உள்ள மேல்நிலை நீர்த் தேக்க தொட்டி அருகில் குளோரினேஷன் பிளாண்ட் நிறுவுதல் | 9.30 |
| 11 | 15-வது நிதிக்குழு மான்யத்தின் கீழ் மந்திரி கவுண்டர் தெருவில் வடிகால் உடன் சிமெண்ட் சாலை அமைத்தல் | 20.00 |
| 12 | 15-வது நிதிக்குழு மான்யத்தின் கீழ் விடுபட்ட வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்குதல் | 20.50 |
| 13 | 15-வது நிதிக்குழு மான்யத்தின் கீழ் பையோ ஷெட்டர் இயந்திரம் கொள்முதல் செய்தல் | 6.00 |
| 14 | 6-வது நிதிக்குழு மான்யத்தின் கீழ் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் கழிப்பறை கட்டுதல் பணி | 20.00 |
| 15 | 6-வது நிதிக்குழு மான்யத்தின் கீழ் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பள்ளி கட்டிடம் பராமரித்தல் பணி. | 27.00 |
| | மொத்தம் | 699.07 |



பி.கே.முரளி, தலைவர்
பாலக்கோடு பேரூராட்சி

சு.டார்த்தி, செயல் அலுவலர், பாலக்கோடு பேரூராட்சி

திருமதி. தாஹசீனா இதயாத்துல்லா, துணை தலைவர்

மன்ற உறுப்பினர்கள்: குருமணிநாதன், விமலன், பிரியா, சாதிக்பாஷா, ஹசினா, பத்தேகான், ரூஹித், லட்சுமி, தீபா, ஆயிஷா, சரவணன், ஜெயந்தி மோகன், பிரேமா முரளி, மோகன், நாகலட்சுமி, சிவசங்கரி பி.எல்.ஆர்.ரவி


Owned Published Maalaitamizhagam by K.Sarvodayam published from M-37D,P.T.Rajan Salai K.K.Nagar, Chennai-78.and Printed at MNS Printers PVT LTD., No.76/1, Bhuvana Nursery Avenue, P.H. Road, Velappanchavadi, Chennai -77. Editor K.Sarvodayam